# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 17 வியாழக்கிழமை (30-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:107


# மருதங்கேணியிலிருந்து இராணுவம் பின்வாங்கியது!

## தந்திரோபாய நடவடிக்கை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்30

**தாளையடி - மருதங்கேணி - செம்பியன்பற்று ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய இராணுவ மையம் மீது நேற்று நண்பகல்வரை சுமார் 12 மணிநேரம் தாங்கள் அகோரத் தாக்குதலை நடத்தி அந்த மையத்தைக் கைப்பற்றிவிட்டதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.**

**அதேவேளை -**

**மருதங்கேணிப் பிரதேசத்தில் குவிக்கப்பட்டிருந்த படையினர் தந்திரோபாய நடவடிக்கையாக அங்கிருந்து கடல்நீரேரிக்கு தென்மேற்குப் பகுதிக்கு வாபஸ் பெறப்பட்டு, கடல்நீரேரி முனையைப் பலப்படுத்தியுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.**

நன்கு பயிற்றப்பட்ட -சுமார் ஆயிரத்து ஐந்நூறு துருப்புக்களைக் கொண்ட - இந்த இராணுவத் தொடரணித் தளம் மீது தாம் நடத்திய கடும் தாக்குதல் காரணமாக அத்தளத்தை நேற்றுப் பிற்பகல் 1.00 மணிக்குப் படையினர் கைவிட்டுப் பின்வாங்கினர் என்றும் -

அந்தத் தள இராணுவ மையத்திலிருந்து பெருமளவு ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் -

விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கிபிர் குண்டு வீச்சு!

வடமராட்சி கிழக்கிலுள்ள மாமுனை, குடாரப்புப் பகுதியில் நேற்றுக் காலை இரு தடவைகள் கிபிர் விமானம் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டது. காலை 8 மணியளவிலும் முற்பகல் 10 மணியளவிலுமே இத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

### பாலம் தகர்ப்பு

பருத்தித்துறை - செம்பியன்பற்று வீதியிலுள்ள புன்னையடிப்பாலம் விடுதலைப் புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இதனை அடுத்து அப்பகுதியூடாக இடம்பெற்று வந்த போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. (உ-15)

## தென்மராட்சியில் மக்கள் தொடர்ந்து இடம்பெயர்வு

சாவகச்சேரி,மார்ச்30

பளையில் தொடர்ந்து படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்று வருவதை அடுத்து பச்சிலைப்பள்ளி, முகமாலை, இத்தாவில், இந்திராபுரம், கிளாலி, எழுதுமட்டுவாள் ஆகிய பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் தொடர்ந்து இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்து வரும் மக்கள் தங்குவதற்கென தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குள் 6 நலன்புரி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் 572 பேர் தற்போது தங்கி உள்ளனர்.

மிருசுவில் சென்நிக்கலஸ் தேவாலயத்தில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 72 பேரும் ஒட்டுவெளி அரசினர் அ.த.க. பாடசாலையில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 34பேரும், மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் 13 குடும்பங்களைச் சேர்ந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு. வாவியில் தாக்குதல்!

மட்டக்களப்பு வாவியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படைப் படகு மீது விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை ஆர்.பி.ஜி. தாக்குதல் நடத்தினர் எனவும் -

இதனால் கடற்படைப் படகு சிறு சேதமடைந்ததாகவும், மட்டக்களப்புப் படை வட்டாரங்கள் நேற்றிரவு தகவல் வெளியிட்டன. (உ-7-21)

## பச்சிலைப்பள்ளியில் 5000 பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம்,மார்ச்30

தென்மராட்சியின் பச்சிலைப் பள்ளி பிரதேசத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் ஆயிரத்து 200 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பச்சிலைப்பள்ளியில் சிக்குண்டு போயுள்ளனர்.

இவர்களின் நிலை தொடர்பாகப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி கொழும்பிலுள்ள யாழ்.அரசாங்க அதிபருக்கு 'பக்ஸ்' மூலம் தகவல் அறிவித்துள்ளார்.

பளைப் பிரதேச மக்களுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்கான முயற்சியாக யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதேச தொண்டர் நிறுவனங்களுடன் அவர் கலந்துரையாடி வருகிறார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சீருடை அணிந்த இளைஞர், யுவதிகள் அணி அணியாக வருவதைக் கண்டோம்

### இந்திராபுரத்தில் இடம்பெயர்ந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச்30

"செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு பளை இந்திராபுரம் பகுதிக்கு அணியணியாக வந்த சீருடை அணிந்த - இளைஞர்களும் யுவதிகளும் எம்மை இடம்பெயருமாறு கேட்டார்கள்."

இவ்வாறு பளை இந்திராபுரம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து மிருசுவில் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ள குடும்பஸ்தர் ஒருவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"எமது பகுதிக்கு அணிஅணியாக வந்தவர்கள் விடுதலைப்புலிகள் என்பதை பின்னர் அறிந்து கொண்டோம். இவ்வாறு வந்தவர்களில் கூடுதலானோர் பெண்களாகவே காணப்பட்டனர்.

எமது பகுதியில் 200 யார் இடைவெளியில் விடுதலைப் புலிகளும் இராணுவமும் நிற்பதைக் கண்டோம். நாம் அங்கிருந்து கால்நடையாக எழுதுமட்டுவாள் பகுதியை வந்தடைந்தோம்" - என்று கூறினார்.

இத்தாவில் பகுதியிலிருந்து இடம

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்களினால் மேலும் 17 பேர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

மருதங்கேணி அரசினர் மருத்துவமனை வளாகம் மற்றும் பளைப் பகுதிகளில் வீழ்ந்துவெடித்த ஷெல்களினால் ஒருவர் உயிரிழந்தார்; மேலும் 17 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மருதங்கேணி அரசினர் மருத்துமனைவளவில் நேற்றுக் காலை 10 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் 10 பேர் காயமடைந்தனர்.

மருதங்கேணி பிரதேச செயலக காவலாளியான கந்தசாமி சோமலிங்கம் (வயது 57) மற்றும் வான் சாரதியான செல்வம் (வயது 28) ஆகியோர் காயமடைந்தவர்களுள் இருவர் என்று கூறப்பட்டது. இவர்களில் செல்வம் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளை வண்ணான்கேணிப் பகுதியில் நேற்றுக் காலை வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் அதே இடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். மேலும் மூவர் காயமடைந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### போக்குவரத்து ஊழியரை மீட்க முயற்சி

யாழ்ப்பாணம்,மார்ச்30

பளைப் பகுதியில் சிக்குண்டுள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த இரு சாரதிகளையும், மூன்று நடத்துநர்களையும் மீட்பது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சபையின் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

யாழ். படைத்தளபதி சிவில் நிர்வாகத்துக்கான பிரிகேடியர் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருடன் மேற்படி விடயம் குறித்து தொடர்புகொள்ளப்பட்டுள்ளதாகவும்- அவர் தெரிவித்தார். (உ-7)

#### ஓட்டோவில் சென்ற சமயம் பலியான

## மூன்று பேரின் சடலங்களும் நேற்றும் மீட்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்30

இத்தாவிலில் கடந்த திங்கட்கிழமை ஓட்டோவில் சென்ற சமயம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த ஓட்டோ சாரதி மற்றும் தம்பதியர் இருவரினதும் சடலங்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் அங்கிருந்து மீட்கப்படவில்லை.

அவற்றை மீட்பதற்கு நேற்று எடுக்கப்பட்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை.

அப்பகுதியில் நேற்றும் ஷெல் வீச்சும் துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்ற தாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-15-117-173)

## செம்பியன்பற்று வடக்கில் 4 சடலங்களும் அடக்கம்

### ஷெல் தாக்குதல்களில் உயிரிழந்தவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச்30

செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் ஷெல் தாக்குதல்களினால் கொல்லப்பட்ட நான்கு பேரினதும் சடலங்களும் அப்பகுதிப் பொதுமக்களினால் வெகு சிரமத்தின் மத்தியில் அடக்கம் செய்யப்பட்டன.

திருமதி பொன்னையா என்ற பெண்ணினுடையதும், அவரது பிள்ளையினதும் சடலங்கள் குடாரப்புவிலும் -

கதிர்காமு, கணேசலிங்கம்ஆகிய இரு ஆண்களினது சடலங்கள் செம்பியன்பற்றிலும்-

வெகுசிரமத்தின் மத்தியில் அப்பகுதி மக்களால் அடக்கம் செய்யப்பட்டதாக அங்கிருந்து வந்தோர் தெரிவித்தனர். (உ-173)


இப்பொழுது.....

உதயன்

இணையப் பதிப்பு

அனைத்துலகிலும் வாழும் தமிழ் மக்கள் வாசிக்கலாம்.

இணைய முகவரி : www.uthayan.com


## புலிகள் தரப்பில் உயிரிழந்த மேலும் நால்வரின் விவரம்

வவுனியா,மார்ச்30

தற்பொழுது நடைபெற்றுவரும் 'ஓயாத அலைகள்-3' நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் உயிரிழந்த மேலும் நான்கு பேரின் விவரங்களை 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்துள்ளது. அவர்களின் விவரம் வருமாறு:-

* வர்ணன் (ஸ்ரீ கனகநாதன் நிமலன் - யாழ்ப்பாணம்)
* இசைப்பொழிலன் (வில்வராசா உதயதாஸ் - யாழ்ப்பாணம்)
* இன்பன் (பாலசுந்தரம் சுதாகரன் - வவுனியா)
* சிதம்பரன் (கைலவாசன் ஜானகிராமன் - யாழ்ப்பாணம்)

இதேவேளை -

கடந்த 17ஆம் திகதி மட்டுவில் பகுதியில் இராணுவத்துடனான மோதலில் மேஜர் மூத்தவன் (கிருஷ்ணன் கிருபாகரன் - யாழ்ப்பாணம்) என்பவரும் -

நுணாவில் பகுதியில் இடம்பெற்ற மோதலில் மேஜர் பூமகன் (சின்னத்துரை அரவிந்தன் - யாழ்ப்பாணம்) என்பவரும் தமது தரப்பில் உயிரிழந்ததாகவும் 'புலிகளின் குரல்' அறிவித்துள்ளது. (உ-5)

யா/பிரான்பற்றுக் கலைமகள் வித்தியாலயம்
பண்டத்தரிப்பு

## சாரணர் சின்னம் சூட்டும் விழா

இடம் :- பாடசாலை மைதானம்
காலம் :- இன்று (2000.03.30) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணி

*தலைவர்*
**திரு. வே. சிவசுந்தரம்** (அதிபர்)

*பிரதம விருந்தினர்*
**திரு. கா. சந்திரபாலன்**
(உதவிக் கல்விப்பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி வலிகாமம் வலயம்)

*சின்னம் சூட்டுபவர்கள்*
**திரு. ந. சௌந்தரராஜன்** (காங்கேசன் துறை மாவட்ட சாரண ஆணையாளர்)
**திரு. எஸ். சிவலோகநாதன** (சாரண ஆசிரியர்)

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரும் அன்புடன் அழைக்கின்றோம்.

(74935) *அதிபர், சாரண ஆசிரியர், சாரணத்துருப்புக்கள்.*

## மங்களகரமான திறப்புவிழா

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் பங்குனி 17ஆம் நாள் இன்று (30-03-2000) வியாழக் கிழமை காலை 7.42 முதல் 9.12 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

### 'வேல் மிக்சர் கூல் ஸ்பொட்'

என்னும் ஸ்தாபனத்தை, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, இல. B-315 கட்டடத்தில் ஆரம்பித்துவைக்க திருவருள் கைகூடியுள்ளது. இந்த வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கு மாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

### ✳ வேல் விசேட தயாரிப்புகள் ✳

*25 ஆண்டுகளுக்கு மேல் அனுபவமுள்ளவர்களின் கைவண்ணத்தில் உருவான*

- மிக்சர்
- நெய்பூந்தி
- பூந்திலட்டு
- மைசூர்பாகு
- பகோடா
- காராச்சேவ்
- பட்டர் கேக்
- றிச்கேக்
- மஸ்கட்

ஆகியவற்றுடன்

- ஐஸ்கிறீம்
- ஸ்பெஷல்
- ஐஸ் சர்பத்
- ஐஸ் சொக்
- ஐஸ் பழம்

போன்ற குளிர்பான வகைகளையும் உண்டு மகிழலாம்.
*(வைபவங்களுக்குத் தேவையானவற்றை முன்கூட்டியே ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்)*

**கிளைகள்:**

வேல் மிக்சர்,
கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

வேல் மிக்சர்,
குளப்பிட்டி வீதி,
கொக்குவில்.

உரிமையாளர்
**A. பார்த்தீபன்**

(74898)


KOBE KOBE KOBE KOBE KOBE

*நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?*

**உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.**

**உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!**

KOBE

அன்டனாக்களும் பூஸ்டர்களும்

**இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்**

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

**இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.**

LANKA NIPPON
No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc, Colombo - 4
Tel: 589992

'KOBE தரத்தின் சின்னம்' (C/10933)

KOBE KOBE KOBE KOBE KOBE KOBE KOBE KOBE


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம் 21-03-1917 மறைவு 29-02-2000

அமரர்

### வயித்தி வல்லிபுரம்

மாதம் ஒன்று மறைந்தது நீங்கவில்லை எம் துயரம்
பாசத்தின் உறைவிடமே எங்களை வழி நடத்திய
அன்புத் தெய்வமே!
உங்கள் உறவுகள் உள்ளம் கலங்கி நிற்கின்றன
அப்பா!
என்றென்றும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு
நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

இன்று (30-03-2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(74918)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### பொன்னையா வேலாயுதம் B.sc.
(வெக்டர்)

காவியினைக் கற்றுத்தந்த காவியநாயகனே!
கணிதமலர் உதிர்ந்து முப்பதுநாள் ஆயினதே!
நும் கணித ஞானத்தால் எம்மை அரவணைத்து
வியாக்கியானமும் சோதனைக் குறிப்பும் பலதந்து
நுட்பங்கள் பல கூறி நாம் பட்டங்கள் பலபெற-
வழிசமைத்த உத்தமரே!
நாம் முளைவிட்டு தளிர்விட்டு விருட்சமாகும் வேளையில்....
ஆண்டுகள் ஆயிரம் சென்றாலும் ஆறுமோ எமது துயரம்?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*2001 (maths)*
*மாணவிகள்*

பிரபல பெண்கள் பாடசாலை
யாழ்ப்பாணம்.

(74930)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக கிராம உத்தியோகத்தர்
**திரு. வே. கதிர்காமநாதன்** அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி த. சுகிர்தரத்தினம்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

*கிராம உத்தியோகத்தர்கள்*
வலிமேற்கு

(C/11577)

# பிணையில் இருந்த நாள்களில் வழக்காளியை மிரட்டினாராம்

## பிணைப்பணம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். நீதிமன்றத்தால் பிணையில் விடப்பட்டிருந்த சமயம் வழக்காளியை மிரட்டி நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் இரண்டாயிரம் ரூபா மேலதிக பிணைப்பணம் செலுத்துமாறு ஒருவருக்கு பணிக்கப்பட்ட சம்பவம் அண்மையில் யாழ். நீதிமன்றில் இடம் பெற்றது.

இருபாலைப் பகுதியில் தாயாரையும் அவரது மகனையும் தாக்கி தாயாரின் சங்கிலியை அறுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேகத்தின் பேரில் கோப்பாய் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது, நீதிவான் அவரைப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

எனினும் பிணையில் இருந்த காலப்பகுதியில் வழக்காளியை மிரட்டியதாக அவர்களது சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்ததைத் தொடர்ந்து மேலதிகமாக 2 ஆயிரம் ரூபா பிணை செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் மேமாதம் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-9)

## பாராட்டு விழா

சங்கானை, மார்ச் 30

சங்கானைக்கல்விக்கோட்ட அதிபர் சங்கத்தினரால், வடக்கு — கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் க. கந்தசாமிக்கு பாராட்டு விழா ஒன்று அண்மையில் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் நடத்தப்பட்டது.

சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. செல்லையா தலைமையில் நடைபெற்றஇந்தப் பாராட்டு விழாவில் அதிபர் சங்கத் தலைவர் ச.கைலாயநாதன், சங்கானைக் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(இ-29)

## ஓய்வூதியம்

யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி ஓய்வூதியர்களின மார்ச் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் கடந்த 27 ஆம் திகதி முதல் வங்கிகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஏழாந் திகதி மார்ச் மாத வவுச்சர்கள் ஓய்வூதியர்களுக்குக் கிடைத்த போதிலும் அவற்றுக்குரிய காசோலைகள் வங்கிகளுக்கு நேற்று முன்தினமே கிடைத்திருந்தன.

(இ-117)

# மட்டக்களப்பில் 6 தினங்கள் சர்வதேச நாடக தின விழா

மட்டக்களப்பு, மார்ச் 30

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் உலக நாடக தின விழா எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆறு நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்த ஆறு நாள் விழாவானது உலக அரங்கியல் தொடர்பான ஒரு பார்வையை அளிக்கும் என கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவரும் இவ்விழா ஏற்பாட்டுக்குழுத் தலைவருமான பேராசிரியர் சி. மௌனகுரு தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையினால் நடத்தப்படவிருக்கும் உலக நாடக விழா தொடர்பாக அறிவிப்பதற்காக மட்டக்களப்பு 'கோப் — இன்' மண்டபத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே பேராசிரியர் மௌனகுரு இவ்வாறு தெரிவித்தார்.

பேராசிரியர் மௌனகுருவுடன் நுண்கலைத்துறை விரிவுரையாளர்களான பால. சுகுமார், எஸ். ஜெயசங்கர் ஆகியோரும் அங்கு சமுகமளித்திருந்தனர். கூத்து, நாடகம், கண்காட்சி, கருத்தரங்கு எனப் பல பிரிவுகளாக இந்த விழா நடைபெறும்.

தொடக்க நாளான திங்கட்கிழமை கண்காட்சி திறந்து வைக்கப்படுவதுடன் பேராசிரியர் மௌனகுரு தலைமையில் நாடகவிழா கிழக்குப் பல்கலைக்கழகப் பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகும். பிரதம அதிதியாகப் பேராதனைப்பல்கலைக்கழகத் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். தில்லைநாதன் கலந்துகொள்வார். அன்றைய தினம் பறை மேளக் கூத்து பறைமேளதாளங்கள், இராம நாடகம் (வடமோடி)ஆகியன இடம்பெறும்.

இரண்டாம்நாள் விழாவுக்கு கலைப் பீடாதிபதி கலாநிதி யு.வி. தங்கராசா தலைமை வகிப்பார். பிரதம அதிதியாகப் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு கலந்து கொள்வார். தொடர்ந்து திருமலை சண்முகா வித்தியாலய மாணவர்களின் காவடி, திருமலை கோணேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் 'நம்மைப்பிடித்த பிசாசுகள்' நாடகம், கிழைத்தென்றல் கலாமன்றத்தின் லட்சுமி நாடகம், மட்டக்களப்பு வை. எம். சி. ஏ. வழங்கும் நஞ்சினில் விளையவோ வீதி நாடகம், கிருஷ்ணா கலைக் கழகத்தின் கெங்கை அம்மன் நாடகம் என்பன இடம் பெறும்.

(ஐ-7-21)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தின் இணைந்த கணிதப் பேராசான்

திரு. ஐ. பத்மநாதன்

அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி சுந்தரம் ஐயாத்துரை

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள், சக ஆளணியினர்.
NEW SCIENCE COLLEGE
NEW SCIENCE HALL.

(74922)


# புலிகளுக்கு ஆயுதம் வருவதை இந்தியா தடுத்தால் பிரச்சினை தீர்ந்துவிடும்

## பிரதி வெளிவிவகார அமைச்சர் கிரியல்ல கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 30

இலங்கைக்குள் விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் மற்றும் மருந்துப் பொருள்களை எடுத்து வருவதை இந்திய அரசு தடுக்குமனால் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும்.

மேற்கண்டவாறு வெளிவிவகார பிரதி அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து வருகை தந்த செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இலங்கைக்குள் ஆயுதங்கள், மருந்துகள் கடத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் இந்து சமுத்திரப் பாதுகாப்பை இந்தியா உறுதி செய்ய வேண்டும்.

இந்த விடயத்தில் இந்தியா சாதகமாக இருக்குமானால் புலிகளுக்கு எதிரான சண்டையில் விரைவில் தீர்வு கிட்டும்.

இந்தியா இலங்கைக்கு இந்த விவகாரத்தில் உதவி செய்யுமானால் இனச்சண்டையும் முடிவுக்கு வந்துவிடும்.

இப்படி அவர் கூறினார். (இ 3)

## விஞ்ஞான விழாவும் சஞ்சிகை வெளியீடும்

கொக்குவில், மார்ச் 30

கொக்குவில் இந்துக்கல்லூரியில் விஞ்ஞான தினவிழாவும் சாரதி சஞ்சிகை வெளியீடும் கடந்த 16 ஆம் திகதி கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல்துறைத் தலைவர் பி. மகினன் கலந்து கொண்டார்.

விழாவில், நவீன விஞ்ஞான உலகில் இயற்கை மனிதனை விஞ்சுமா மனிதன் இயற்கையை விஞ்சுவானா, எனும் பட்டிமன்றம் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்றது.

(இ-69)

## வேலணைப் பாடசாலைகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30

வேலணைப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அதிபர்களுக்கும் ஈ.பி.டி.பி அமைப்பின் தீவக அமைப்பாளருக்கும் இடையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, நயினாதீவு ஆகிய பகுதிகளின் பாடசாலை அதிபர்கள் ஆகியோர் பங்கு பற்றினர்.

பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் இங்கு ஆராயப்பட்டு அதற்கான நிதிஒதுக்கீடு சம்பந்தமான முன்மொழிவுகள் அதிபர்களினால் ஈ. பி. டி. பி அமைப்பின் தீவக அமைப்பாளர் ந. மனோகரனிடம் கையளிக்கப்பட்டன.

இந்த முன்மொழிவுகளை அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுப்பதாக மனோகரன் உறுதி கூறினார்.

அத்துடன் அதிபர்கள் மகஜர் ஒன்றையும் அவரிடம் கையளித்தனர்.

தாம் கஷ்டப்பிரதேசத்தில் பணிபுரிவதால் தமக்கு கஷ்டப்பிரதேசப் படி வழங்க வேண்டும் என்று அதிபர்கள் மகஜரில் கோரினர். (இ-3)

## கூட்டம்

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அவசர நிறைவேற்றுக் குழுவின் கூட்டம் இன்று பிற்பகல் 5. 30 மணிக்கு யாழ். கிரிக்கெட் அக்கடமியில் நடைபெறவிருக்கின்றது.

இந்தக் கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (இ-3)

## காணவில்லை

மட்டக்களப்பு, வாழைச்சேனை பகுதியில் இளம்பெண் ஒருவர் கடந்த 24 ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பெய்த்தாளை அகதிமுகாமில் வசித்து வந்த இளையதம்பி கவிதா (வயது 19) என்பவரே காணாமற் போயுள்ளாவராவார். (இ-8)

# யுத்தம் இனியும் தொடருமானால் பொதுமக்களுக்குப் பெரும் பாதிப்பு

## மட்டு. லயன்ஸ் கழக கருத்தரங்கில் உரை

மட்டக்களப்பு, மார்ச் 30

இலங்கையில் நடைபெறும் யுத்தத்துக்குப் பெருமளவு நிதிசெலவு செய்யப்படுவதால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. யுத்தம் நிறுத்தப்பட்டுச் சுமுகநிலை ஏற்படவில்லையென்றால் இந்த நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு மக்களும் சமூக, பொருளாதார ரீதியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் மேலும் பாதிக்கப்படுவார்கள்.

பேராதனைப் பல்கலைக் கழகப் பொருளியற்பீட பேராசிரியர் மா. சின்னத்தம்பி இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு லயன்ஸ் கழக ஏற்பாட்டில் 'கோப்— இன்' மண்டபத்தில் 'இலங்கையின் பொருளாதாரமும் இன்றைய நிலையும்' என்ற தலைப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு லயன்ஸ் கழகத் தலைவரும் கிழக்குப் பல்கலைக்கழகப் பதில் பதிவாளருமான ஏ. டி. ஹரிஸ் தலைமையில் இந்தப்பேருரை நடைபெற்றது.

பேராசிரியர் சின்னத்தம்பி தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

தொடரும் யுத்தத்தினால் சொத்து, சூழல் அழிப்பு, அகதிகள் பிரச்சினை, வெளிநாட்டவர்கள் இலங்கையில் முதலீடு செய்யத் தயங்குதல், பயிற்சிபெற்ற தொழிலாளர்கள் வெளியேற்றம், இளஞ்சந்ததியினர் அழிப்பு, வயது முதிர்ந்தவர்களைப் பராமரிக்கும் பிரச்சினை, பொருள்களுக்கான விலையேற்றம், மக்கள் இடம்பெயர்வு, சமூகப் பிறழ்வு இவ்வாறு பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

யுத்தத்தை நிறுத்தவேண்டிய பாரிய பொறுப்பு இலங்கையர் என்ற ரீதியில் சகலருக்கும் உண்டு. இலங்கையில் இளம் சந்ததி யுத்தத்தினால் அழிகின்றபோது முதியோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. பிள்ளைகள் இடம்பெயர்வதால் வெளிநாடுகளுக்குச்செல்வதால், யுத்தத்தினால் மரணமடைவதால் வயதுமுதிர்ந்த காலத்தில் பெற்றோர் அநாதரவாக விடப்படும் நிலை காணப்படுகிறது.

1983 இல் இலங்கையில் நடந்த கலவரத்தைத் தொடர்ந்து பொருளாதார வளர்ச்சி 3 வீதமாக வீழ்ச்சியடைந்தது, இந்த நிலை 89 வரை நீடித்தது. அதன் பின்னர் பொருளாதாரத்தில் சற்றுமுன்னேற்றம் காணப்பட்டது. 1998 ஆம் 1999 ஆம் காலப்பகுதியில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் யுத்தச் செலவுகள் அதிகரிப்பால் அந்த முன்னேற்றத்தின் பலனை மக்கள் அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் இலங்கையின் தலா வருமானம் 837 அமெரிக்க டொலர்களாகும். தலா வருமானம் அதிகரித்தபோதிலும் வருமான பங்கீடு சமமின்மையால் செல்வந்தர்களுக்கே இது சாதகமாக உள்ளது. அண்மையில் கைச்சாத்திடப் பெற்ற இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தம் நுகர்வோரான பொதுமக்களுக்கு நன்மை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இது எவ்வளவுக்கு நடைமுறைச் சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

வரிவிலக்கு அளிக்கப்பட்டதால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் குறிப்பிட்ட பொருள்களுக்கு விலை குறையவேண்டும், ஆனால் பொருள்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் வரிச்சலுகைகளின் முழுப்பலனையும் நுகர்வோருக்கு வழங்குவார்களா அல்லது முழுமையாக அதன் நன்மைகளைத் தாமே அனுபவிப்பார்களா என்பதைப் பொறுத்துத்தான் நன்மை தீமையை நாம் கணிப்பிட முடியும். வழமைபாகவே முதலாளிகள் ஒருபோதும் பெருந்தன்மையோடு நடந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் கே. விஜயசந்திரனும் உரையாற்றினார். மட்டக்களப்பு லயன்ஸ் கழக செயலாளர் கே. கனகரத்தினம் நன்றியுரையாற்றினார்.

[ஐ-7-21]

யா / மகாஜனக் கல்லூரி–தெல்லிப்பழை

**பழைய மாணவர் சங்கம்**

## வருடாந்த ஒன்று கூடலும் ஆண்டுப் பொதுக் கூட்டமும்

காலம்:- 16 - 04 - 2000

இடம்:- பாடசாலை வளாகம், அம்பனை

வருடாந்த ஒன்று கூடல் காலை 9. 30 மணி முதல் நடைபெறும்.

மதிய போசன விருந்து பி.ப. 1. 00 மணிக்கு இடம் பெறும். (கலந்து கொள்ள விரும்பும் பழைய மாணவர்கள் ரூபா 50/- (ஐம்பது) 10. 04. 2000 இற்கு முன்பு பொருளாளரிடம் செலுத்துதல் வேண்டும்)

ஆண்டுப் பொதுக் கூட்டம் பி. ப. 2 00 மணிக்கு இடம் பெறும். உறுப்புரிமையை 10. 04. 2000 இற்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும். உறுப்பினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படமாட்டாது.

திரு.பொ. சுந்தரலிங்கம், தலைவர்
திரு.நா. போஜன் திரு.சி. தேவகுமாரன் இணைச் செயலாளர்

24. 03. 2000
(74917)

## 41 ஆம் நாள் நினைவலையும் நன்றி நவிலலும்

மண்ணக மலர்வு: 16 — 05 — 1922



விண்ணக வாழ்வு: 19 — 02 — 2000

### திருமதி திருச்செல்வம் திரேசம்மா

திதி: 30-03-2000

வழிகாட்டி வல்லோராய் வளமுய்து ஓங்கி
நலம்வாழ நமையிங்கு நகர்த்திட்ட தலைவி
ஒளி நீங்கி நாற்பத்தொருநாள்
ஒழிந்தோடினாலும் – எம்
விழி நீரின் ஈரங்கள் விட்டகலவில்லை.

அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தி. றொபேட்
(மகன் - பரி.யோவான் கல்லூரி)

பாசையூர். (74732)

## 30 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 17 — 02 — 1920



இறப்பு: 01 — 03 — 2000

### திருமதி மகேஸ்வரி மகாதேவா

அன்பினால் ஆர்த்து அறிவாற்றல் அளித்தாயே
துன்பினால் தளர்வுற்றில் துணையாக நின்றாயே
என்பெலா முருகவெங்கும் எம்மையும் நீ மறந்தாய்
இன்னரு ளீசன்பாதத் திருந்து நீ பெறுக சாந்தி!

நினைந்துருகும்

சகோதரிகள், மகள், மருமகன்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
த. ந ஆலாலசுந்தரம்,
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

(74697)

# ஆசிரிய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களிடம் இருந்து கடந்த நவம்பரில் கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே. அவர்களில் மேலும் ஒரு தொகுதியினரின் விவரங்கள் இங்கு பிரசுரமாகுகின்றன.

நாகநாதன் சந்திரகுமரன் (புதுமுறிப்பு, உருத்திரபுரம், கிளிநொச்சி), அருணாசலம் தயாநிதி (சில்வா றோட், வட்டக்கச்சி, கிளிநொச்சி), சாந்தலிங்கம் விமலகுமார் (ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), தருமநாயகம் தயாளினி (இரத்தினபுரம், கிளிநொச்சி) தற்பிரியா தயாபரசிவம் (ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), சண்முகராசா கௌசலா (பழைய காமம், முரசுமோட்டை, பரந்தன்), குமாரசாமி சேரன் (சில்வா றோட், வட்டக்கச்சி, கிளிநொச்சி), மார்க்கண்டு பகீரதன் (கணேசபுரம், கிளிநொச்சி), தர்மராசா விஜயகுமார் (ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), பாலசுந்தரம் மதன் (கட்சன் றோட், வட்டக்கச்சி, கிளிநொச்சி), தர்மலிங்கம் முரளிதரன் (திருநகர், கிளிநொச்சி) அன்னலிங்கம் ரவிச்சந்திரன் (கண்டி றோட், பளை), அபிராமி ஆறுமுகம் (வண்ணான் கேணி, கண்டி றோட், பளை)

எஸ். சுபத்திராதேவி (பெரிய பளை, பளை), வொனிபாஸ் டயானா (முல்லைவாடி, பளை), லூர்து யசிந்தா மரியதாஸ் (புலோப்பளை மேற்கு, பளை), பரம்ஜோதிபத்மரூபி (பெரியபளை, பளை), நல்லதம்பி தாமோதரம்பிள்ளை யசோதா (பேராலை, பளை), யாக்கோப் மேரிஸ் ரெல்லா (கிளாலி, எழுதுமட்டுவாள்), ஸ்ரான்லி மேரி ஜெஸ்மின் விஜி (கிளாலி, எழுதுமட்டுவாள்), சின்னத்தம்பி கமலரூபன் (மல்வில், இயக்கச்சி), இராயநாதன் சங்கரன் (ஜெயபுரம் வடக்கு, கிளிநொச்சி], நாகராசா ஜெகதீஸ்வரன் (கட்சன் றோட், வட்டக்கச்சி, கிளிநொச்சி), துரைசாமி துஷ்யந்தி (பிரதேச செயலகம், பூநகரி), ஜினிதா முருகையா (கட்டைப்பிராய், யாழ்ப்பாணம்), மதிவதனி குணரட்ணம் (சிவநகர், உருத்திரபுரம், கிளிநொச்கி).

கே. அகிலன் (சில்வா றோட், வட்டக்கச்சி, கிளிநொச்சி), சற்குணம் ஜேசுதாசன் (பள்ளிக்குடா, பூநகரி) மாணிக்கம் சுனேதா (பனை அபிவிருத்திச் சபை, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), வரதராசா முரளிதரன் (யூனியன் குளம், அக்கராயன், கிளிநொச்சி), கலிஸ்து விமல்நிக்ஸன் (ஜெயபுரம் வடக்கு, பல்லவராயன்கட்டு), திருநாவுக்கரசு யோகநாதன் (கறுக்காய் தீவு, பூநகரி), இராஜேஸ்வரி ஐயம்பிள்ளை (கிராஞ்சி, சிவபுரம், பூநகரி) ஆறுமுகம் பரதன் (ஆலங்கேணி, பூநகரி), இரட்ணம் ஜெயசாந்தி (செழியதீவு அ.த.க. பாடசாலை, செல்வபுரம், பூநகரி), கணபதிப்பிள்ளை பிறேமினி (கரியாலை, நாகபடுவான், பல்லவராயன் கட்டு), பொன்னுச்சாமி ஆனந்தி (முழங்காவில், விநாயகபுரம்), அருந்தவநாதன் கணேசராஜா (எஸ். எல். ஆர். சி., ஜெயபுரம்).

இரட்ணசிங்கம் தற்பரன் (முழங்காவில் மகா. வித்தி, விநாயகபுரம்), ஸ்ரனின்லஸ் மேரி வலன்ரினா (முழங்காவில், பூநகரி), பத்மநாதன் ஆனந்தராசா (செட்டிக்குறிச்சி, பூநகரி), ஆறுமுகம் பரிமளா (ஆலங்கேணி, பூநகரி), கருணைநாதன் லோஜினி (வேரவில், பூநகரி) விஜிதா குலசிங்கநாதன் (கரியாலை, நாகபடுவான், முழங்காவில்), லோப்பியா ஸ்ரனிஸ்லஸ் (நாச்சிக்குடா, விநாயகபுரம்), ஐயாத்துரை துயைலாதேவி (கரியாலை, நாகபடுவான், முழங்காவில்). மங்களேஸ்வரி கார்த்திகேசு (நாச்சிக்குடா, முழங்காவில், பூநகரி), தியாகராசா சுமதி (ஜெயபுரம் வடக்கு, பல்லவராயன்கட்டு), முத்துலிங்கம் ஜெயமதி (விநாயகபுரம், முழங்காவில்).

ஈ. கோமளேஸ்வரி (பல்லவராயன்கட்டு பூநகரி), இராசநாயம் சசிந்தா (4 ஆம் கட்டை, மன்னார் றோட், பூநகரி), ஆர். ஜெயகுமார் (பிலாவடி றோட், புலோலி தெற்கு), சரவணபவன் கபிவராணி (கரியாலை, நாகபடுவான், முழங்காவில்), ஆனந்த ஐயர் கேசவநந்தமூர்த்தி (கரியாலை, நாகபடுவான், முழங்காவில்), பாலசிங்கம் நாகரஞ்சினி (மாதிரிக் கிராமம், பல்லவராயன்கட்டு), சிவரத்தினம் சிவதாசன் (கறுக்காய் தீவு, பூநகரி), தேவகுலசிங்கம் சிவராணி (வீட்டுக்கிட்டம், முழங்காவில்), தியாகராசா பிரசாபினி (4 ஆம் யூனிற், திருநகர் மல்லாவி) யோகரட்ணம் இளங்கீரன் (ஜெயபுரம் வடக்கு ஜெயபுரம்).

காஞ்சனா மகாலிங்கம் (தண்ணீரூற்று, முள்ளியவளை), அருளப்பு யூடெஸ் கருணாகரன் (இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு), மாலினி செல்வராசா (தபாற் கந்தோர், முள்ளியவளை), தங்கராசா ஜெயந்தினி (கணுக்கேணி மேற்கு, முள்ளியவளை), சக்தி சிவானந்தன் (முதலாம் வட்டாரம், முள்ளியவளை), பொன்னுசாமி சாந்தரூபன் (3 ஆம் வட்டாரம், கருணாகரன் லேன், முள்ளியவளை), டிமாலினி லோகசௌந்தரலிங்கம் (விநாயகர் வீதி, முள்ளியவளை), தியாகலிங்கம் ஜெயபாபு (5ஆம் கட்டை, அலம்பில், முல்லைத்தீவு), தேவாஞ்சலி தர்மலிங்கம் (செம்மலை, அலம்பில், முல்லைத்தீவு), சந்திரசேகரம் ராஜசங்கர் (4 ஆம்வட்டாரம், முள்ளியவளை), திருநாவுக்கரசு ஜனகராஜ் (மகாறம்பைக்குளம், வவுனியா),

இராமலிங்கம் இளங்குமரன் (செம்மலை, அலம்பில்), சிவநாதன் அமுதா (கணுக்கேணி மேற்கு, முள்ளியவளை), சுப்பிரமணியம் உதயசீலன் (6 ஆம் வட்டாரம், குமுளமுனை, முள்ளியவளை,, சிவராசா சுமித்திராதேவி (கருணாகரன் லேன் வற்றாப்பளை), வாமதேவன் விதுரன் (துறைமுக வீதி, திருகோணமலை), ஜெயரஞ்சினி தியாகராசா (4ஆம் வட்டாரம், முள்ளியவளை), சின்னத்தம்பி கஜேந்திரன் (செம்மலை, அலம்பில்), ஜெயானந்தராசா நிசாந்தினி (4ஆம் வட்டாரம், முள்ளியவளை), விஜயகுமார் நவநீதன் (பூங்கா வீதி, வவுனியா), புண்ணியமூர்த்தி மதிவதனா (கரைச்சி குடியிருப்பு, முல்லைத்தீவு), சின்னையா தவராசா (செல்வபுரம், முல்லைத்தீவு), வினோசா சிவசோதி (முதலாம் வட்டாரம், முள்ளியவளை), தங்கவேல் சிவகுமார் (வட்டுவோகல், முல்லைத்தீவு).

வல்லிபுரம் வத்சலா (ஆறுமுகத்தான்குளம், குமுளமுனை, முள்ளியவளை), மத்தியூஸ் கிளென் (அம்பலவன் பொக்கனை, முல்லைத்தீவு), குமுதா கிருஸ்ணபிள்ளை தண்ணீரூற்றுமுள்ளியவளை), ஞானப்பிரகாசம் சுடாஜினி (4ஆம் கட்டை, அலம்பில், முல்லைத்தீவு), சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை (முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு), நவரட்ணம் பரமேஸ்வரன் (முதலாம் வட்டாரம், முள்ளியவளை), வாசுகி நடராசா (4 ஆம் வட்டாரம், முள்ளியவளை), மாணிக்கவாசகர் பகீரதன் (வற்றாப்பளை, முள்ளியவளை), செல்லத்துரை ஜெசிகுமார் (ஆத்திகுடிலேன், கந்தர்மடம்) தங்கராசா கனகசபேசன் (7 ஆம் வட்டாரம், குமுளமுனை, முல்லைத்தீவு).

(ஐ-10)

(தொடரும்)

## உடற் பயிற்சி போட்டிகள்

வலி. தெற்கு, மார்ச் 30

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள கோட்டங்களில் உடற்பயிற்சிப் போட்டிகள் ஏப்ரல் முதல் வாரத்தில் இடம்பெற உள்ளன.

உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய நான்கு கோட்டங்களுக்கும் உட்பட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் நடைபெற்று, பின்னர் வலய மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டிகள் நடைபெறும் என உடற் கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் வீ. பாலசிங்கம் தெரிவித்தார்.

ஏப்ரல் 4ஆம் திகதி உடுவில் கோட்டப் போட்டிகள் — ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும்

ஏப்ரல் 5 ஆம் திகதி சங்கானைக் கோட்டப் போட்டிகள் — சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும் —

ஏப்ரல் 6 ஆம் திகதி தெல்லிப்பழை கோட்டப் போட்டிகள் மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் —

ஏப்ரல் 10ஆம் திகதி சண்டிலிப்பாய் கோட்டப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெற உள்ளன.

உடற்பயிற்சிப் போட்டிகள் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை உடற்பயிற்சி பாட ஆலோசகர்களான எம். லோகநாதன், எஸ். மகாலிங்கம் ஆகியோர் மேற்காண்டுள்ளனர். (இ–152)

## கண்ணீர் அஞ்சலி

வேலணை கல்விக் கோட்ட
உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திரு. சோ. தில்லைநாதன்**

அவர்களின் பாசமிகு தந்தை

### அமரர் கார்த்திகேசு சோமசுந்தரத்தின்

மறைவு குறித்து அவரது பிள்ளைகட்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

திருமதி பி.எம்.ஜே. அன்ரனி,
குடும்பத்தினர்.

நெடுந்தீவு–13 (74916)

# உகண்டாவில் மனிதப்புதை குழி தோண்டும் பணிகள் ஆரம்பம்!

## இதுவரை 74 சடலங்கள் மீட்பு

கம்பாலா, மார்ச் 30

உகண்டாவின் கனுன்டு என்ற கிராமத்தில் இருப்பதாகக் கருதப்படும் பாரிய மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் பணிகளை பொலீஸார் ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 600 பேர் புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் இந்தப் புதை குழிகளில் இருந்து நேற்று முன்தினம் 74சடலங்கள் மீட்கப்பட்டன.

இந்தச் சடலங்களில் 20 சடலங்கள் சிறுவர்களுடையவை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பெரும்பாலான சடலங்களில் கத்திவெட்டுக்காயங்கள் காணப்பட்டன. சில கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டவை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

'உலகம் அழியப் போகிறது அதற்கு முன்னர் நாம் சொர்க்கத்துக்குச் செல்வோம்' என்ற கொள்கையுடைய 'ஆண்டவரின் பத்துக்கட்டளைகளை மீண்டும் அமுல்படுத்துவதற்கான இயக்கம்' என்ற கிறிஸ்தவ அமைப்பைச் சேர்ந்த சுமார் 400 பேர் தேவாலயத்துக்குள் தீமூட்டித் தற்கொலை செய்தனர் என்று முன்னர் செய்திகள் வெளிவந்திருந்தன.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸார் தற்கொலைச் சம்பவத்தை மறுத்துள்ளனர்.

திட்டமிடப்பட்டு 600க்கு மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் புதை குழியில் புதைக்கப்பட்டனர் என்று பொலீஸார் தற்சமயம் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாகப் பொலீஸார் மேற்கொண்ட விசாரணைகளின் பேரில் அந்த அமைப்பின் மதகுரு தங்கியிருந்த பங்களாவுக்குப் பின்புறம் உள்ள தோட்டத்தில் மேற்கொண்ட தேடுதல்களில் புதைகுழிகளில் இருந்து முதலில் 73 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

புதைகுழிகள் வெட்டப்பட்டு அவற்றுக்குள் சடலங்கள் போடப்பட்டு கொங்கிறீட் பாதுகாப்பு அரண் கட்டப்பட்டிருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

அந்தப்பகுதியில் இருப்பதாகக் கருதப்படும் எஞ்சிய மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணி தொடர்ந்து இடம் பெறுகின்றது (இ-க-3)

# 25 வருடமாகச் சிகரெட் பிடித்த பெண் மரணப்படுக்கையில்!

## நஷ்டஈடு வழங்க நீதிமன்று தீர்ப்பு

லண்டன், மார்ச் 30

கடந்த 25 வருடகாலமாகச் சிகரெட் புகைத்துச் சுவாசப்பைப் புற்றுநோய்க்கு இலக்காகி மரணப் படுக்கையில் உள்ள பெண் ஒருவருக்கு இரண்டு கோடி அமெரிக்க டொலரை நஷ்டஈடாக வழங்குமாறு இரு சிகரெட் நிறுவனங்களுக்கு கலிபோர்னிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டெஸ்லி வைஸ்ஸி (40 வயது) என்னும் 4 பிள்ளைகளின்தாயார்1969 ஆம்ஆண்டு முதல் சிகரெட் பிடித்து வந்தார். இதன் காரணமாக அவரது சுவாசப்பையில் புற்றுநோய் ஏற்பட்டு அவர் மரணப்படுக்கையில் உள்ளார்.

இவரது இந்த நிலைமைக்கு சிகரெட்டை உற்பத்தி செய்த இரு நிறுவனங்கள் காரணம் எனக் கூறி அந்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கில் ஆஜரான நிறுவனத்தின் சட்டத்தரணிகள் பிரஸ்தாப சிகரெட் பெட்டிகளில் ''உயிருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது'' என்று அச்சிடப்பட்டிருந்தது என்று நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதை ஏற்க மறுத்த நீதிமன்றம் இரு நிறுவனங்களுக்கும் எதிராகத் தீர்ப்பு வழங்கியது. (இ-க-3)

### பறக்கும் ரயில்

டோக்கியோ, மார்ச் 30

பறக்கும் ரயில்களை ஜப்பானிய விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

தண்டவாளத்தில் இருந்து சில அடி உயரத்தில் பறக்கும் இந்த ரயில் மணிக்கு 500 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும்.

இந்த ரயிலில் 235 பயணிகள் செல்ல முடியும்.

விமானங்கள் போன்று இந்தப் பறக்கும் ரயிலுக்கும் இறக்கைகள் பொருத்தப்பட்டிருக்கும்.

இந்தவகை ரயில்கள் இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டில் பாவனைக்கு வரும் என ஜப்பான் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

(இ-க-3)

### எல்லைப் பகுதியில் குண்டு வெடிப்பு

காபூல், மார்ச், 30

பாகிஸ்தான் —ஆப்கான் எல்லையில் மேற்குப் பகுதிக் கிராமம் ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் அகதிப் பெண்கள் உட்பட 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர்: 18 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆப்கான் அகதிகள்கூடுதலாக வாழும் அந்தக் கிராமத்தில் கடைத்தொகுதி ஒன்றிலேயே இந்தக் குண்டு வெடித்தது.

இந்தத் தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை.

(இ-க-3)

### அமைச்சர் விசாரணையில்

ஜகார்த்தா, மார்ச் 30

இந்தோனேசிய முன்னாள் வர்த்தக அமைச்சர் அசாத் ஊழல் மோசடி தொடர்பாகத் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

முன்னாள் அதிபர் சுஹார்ட்டோவின் நெருங்கிய சகாவான இவர் கடந்த சில மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

(இ-3)

### பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு

பாகிஸ்தானில் குண்டு ஒன்று வெடித்ததில் 6 பேர் கொல்லப்பட்டனர். 11 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையேயான எல்லைப் பகுதியில் தோர்க்கான் என்ற இடத்திலேயேகுண்டுவெடித்துள்ளது.

கடை ஒன்றிலேயே நேற்று முன்தினம் இந்தக் குண்டு வெடித்ததாக பொலீஸார் தெரிவித்தனர். (இ-க-9)

# இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் மீது ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள்!

## எட்டு மாத கால விசாரணையில் முடிவு

இஸ்ரேலின் முன்னாள் பிரதமர்பெஞ்சமின் நத்தன்யாகு மீது ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஜூலை மாதம் பதவி விலகிய அவர் மீதும் அவரது மனைவி மீதும் ஊழல், நம்பிக்கை மோசடி மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகக்குற்றச் சாட்டுக்களை இஸ்ரேல் பொலீஸார் சுமத்தியுள்ளனர்.

ஆட்சிக்காலத்தில் அவருக்கு கிடைத்த அன்பளிப்புப் பொருள்களை அவர் புதிய அரசிடம் ஒப்படைக்கத் தவறினார் என்றும்—

பல திட்டங்களில் அவர் லஞ்சம் பெற்றார் என்றும் — பொலீஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.

கடந்த 8 மாத காலமாக அவரை விசாரணை செய்து வந்த இஸ்ரேல் பொலீஸார் அவர் மீது பலகுற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

நீதித்துறையிடம் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதி அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

விரைவில் அவர் நீதியின் முன் நிறுத்தப்படுவார் என்று நீதித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-க-3)

# காஷ்மீர் பற்றி இந்தியாவுடன் எந்த நேரமும் பேசுவதற்குத் தயார்

## பாக். இராணுவ ஆட்சியாளர் தெரிவிப்பு

கோலாலம்பூர், மார்ச் 30

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்தியாவுடன் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் பேச்சுக்களை நடத்தத் தாம் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் தெரிவித்துள்ளார்.

மலேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் அங்கு வைத்து 'பைனாஞ்சல் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இப்படிக் கூறியுள்ளார்.

காஷ்மீரில் பதற்றத்தைக் குறைக்கும்படி அங்கு இயங்கும் தீவிரவாத அமைப்புக்களைக் கேட்கவிருக்கிறேன். அதற்கான முயற்சிகளை உடன் ஆரம்பித்துள்ளேன்.

அமெரிக்க அதிபரின் இஸ்லாமாபாத் விஜயத்தை அடுத்து இந்தியாவும்–பாகிஸ்தானும் பேச்சுக்களை நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனக் கருதுகிறேன்.

பாகிஸ்தானில் ஜனநாயகத்தைக் கொண்டுவருவதற்கான காலஅட்டவணையைத் தயாரிக்க முன்னர் சில குறிக்கோள்களை எட்ட விரும்புகிறேன்.

இப்படி அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார். (இ-3)

**உலக அரங்கில்**

# இந்தியப்படை இருந்ததனாலேயே வடக்கு-கிழக்கை இணைக்கமுடிந்தது

## முன்னாள் தளபதி கல்கத் கூறுகிறார்

புதுடில்லி, மார்ச் 30

இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்ததாலேயே வடக்குமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் ஒரே தாயகமாக இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்ற முடிந்தது. இது தொடர்பாக அதிகளவிலான நெருக்குதலை இலங்கை அரசுக்குக் கொடுத்தோம்.

இந்திய அமைதிப் படைக்குத் தலைமை வகித்த முன்னாள் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கல்கத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இணையச் செய்திச் சேவைக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலை கொண்டிருந்த சமயம் மாகாணசபைத் தேர்தல் இடம்பெற்று மாகாணசபைஉருவாக்கப்பட்டது.

இந்த மாகாணசபையை உள்ளடக்கியதாக வடக்கு—கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு ஜனாதிபதி பிரகடனம் செய்திருக்க வேண்டும். ஆனால் இது உடனடியாக நடைபெறவில்லை. இது விடயமாகஅதிக இடையூறுகள் ஏற்பட்டன. நாம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தோம்.

இந்த விடயத்தில் நாம் சாதிக்கக் கூடியவற்றைச் சாதித்தோம். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட விடயம் இப்போது மறக்கப்பட்டதாகிவிட்டது.

மாகாண சபைக்கு அப்பொழுது பொலீஸ் படை இருக்கவில்லை. அங்கு இருந்த பொலீஸ்படையிலும் சிங்களவரே இடம்பெற்றிருந்தனர் இது நடைமுறையில் சாத்தியப்படாத ஒரு விடயமாகும்.

இதனால் பொலீஸ் படை ஒன்று உருவாக்கப்பட வேண்டியிருந்தது. எமது உதவியுடன் அந்தப் படை உருவாக்கப்பட்டது.

துரதிஷ்டவசமாகஇலங்கை அரசு வடக்கு — கிழக்கு மாகாணசபைக்கான அதிகாரங்களை வழங்கவில்லை. இதனால் மாகாண சபை ஒழுங்காகச் செயற்பட முடியவில்லை. அதிகாரப் பகிர்வு இடம்பெற்றிருக்கவில்லை. அதிகாரப்பகிர்வு தொடர்பாக பிரகடனம் செய்த போதும் அதற்குரிய சட்டம் கொண்டுவரப்படவில்லை இலங்கை – இந்திய உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த சில அம்சங்களை இலங்கை அரசு விலக்கிக் கொள்ள விரும்பியது.

உடன்படிக்கையின் பிரகாரம் முழுமையாக நாம் நடந்துகொண்டோம். தமிழர்களின உரிமைகள் தொடர்பாக இந்தியா ஈடுபாட்டுடன் செயற்பட்டது. ஆனால் பிரேமதாஸா இதனை நடைமுறைப்படுத்த விரும்பவில்லை.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகசட்டசபைக்குத் தேர்தல்; அடுத்த ஆண்டு மார்ச்சுக்கு முன்!

தமிழ்நாடு உட்பட மூன்று மாநிலங்களில் அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்கு முன் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் எம். எஸ். கில் அறிவித்துள்ளார்.

தமிழகம், கேரளம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் ஆயுள் காலம் மே மாதம் முடிவடைகின்றது.

எனவே அவற்றுக்கான தேர்தலை மார்ச் மாதத்துக்கு முன்பாக நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் சொன்னார்.

இந்தத் தேர்தல்களில் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் விவரம் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

### கல்விச்சேவை ஆணைக்குழுவின் முடிவை ஆட்சேபித்து
# நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்ய
# கல்வி அதிகாரிகள் நடவடிக்கை

திருகோணமலை, மார்ச் 30

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை வகுப்பு III க்கு நியமனம் பெற்று வடக்கு—கிழக்கில் பணிபுரியும் 68 கல்வி அதிகாரிகளும் தமக்கு எதிராக எடுத்துள்ள முடிவை ரத்துச் செய்யக் கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி நியமனம் பெற்றுப் பணிபுரிந்து வந்த இந்த அதிகாரிகளுக்குக் கல்விச்சேவை ஆணைக்குழு கடிதம் ஒன்றைக் கடந்த வாரம் அனுப்பியிருந்தது.

வழக்கு ஒன்றின் தீர்ப்பின் பிரகாரம் நியமனங்கள் ரத்துச் செய்யப்படுவதாகத் தெரிவித்தே இந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இந்தக் கடிதம் கிடைத்த பின்னர் மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் பிரஸ்தாப அதிகாரிகளைத் தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்குமாறு வலய அலுவலகங்களுக்குச் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தார்.

ஆனால் கல்விச்சேவை ஆணைக்குழுவின் பணிப்புரையை ரத்துச் செய்யக் கோரி பிரஸ்தாப அதிகாரிகள் வழக்குத்தாக்கல் செய்யச் சட்ட ஆலோசனை பெற்று வருகின்றனர். (இ-3)

## படையினரால் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர் மரணமானார்

கொழும்பு, மார்ச் 30

இலங்கைப்படையினரால் கைது செய்யப்பட்டு மீதிகான தடுப்புமுகாமில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர் ஒருவர் நேற்று முன்தினம் களுபோவல வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

தொடர்ச்சியாக சுகவீனமுற்றிருந்த இவருக்குப் போதிய வைத்திய வசதிகள் செய்யாமையே இவரது மரணத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தொல்லைதவிர்ப்புக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப் போவதாக மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மதுரையைச் சேர்ந்த வேல்சாமி ராஜா (வயது 38) என்பவரே மரணமடைந்தவர் ஆவார்.

கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி கடலில் ஏற்பட்ட கைகலப்பில் கடலில் வைத்து இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்ட இவர் மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுப் பின்னர் மீதிகான தடுப்பு முகாமுக்குக் கொண்டுவரப்பட்டார்.

அதேசமயம் தமது சக கைதி ஒருவருக்கு நேர்ந்த கதி குறித்து ஆத்திரமுற்ற மற்றைய கைதிகள் பொலீஸாருடன் சிறு கைகலப்பில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை ஏனைய பதினொரு மீனவர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளனர்.

(இ-8)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 30

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டிலான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

பாதிக்கப்பட்டவர்கள் தமது சுயவிவரங்களுடனான படிவத்துடன் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-3)

### தாக்குண்ட ஆசிரியர்

யாழ்ப்பாணம், மார்ச் 30

பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த வேளை இனந்தெரியாத குழுவால் தாக்கப்பட்ட ஆசிரியர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் பணிபுரிபவர் அல்லர் என்று அக்கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார்

யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற இ பிறேமச்சந்திரன் [வயது 32] என்ற சம்பந்தப்பட்ட ஆசிரியர், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது. முன்னர் வெளியான செய்தியில் பாடசாலையின் பெயர் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது; வருந்துகிறோம். [அ]

### செயற்பாட்டுக் கருவிகள் அன்பளிப்பு

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 30

தென்மராட்சி கல்வி வலய விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்துக்கு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சினால் செயற்பாட்டுக் கருவிகளில் ஒரு தொகுதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கத்தோடு மரவேலை, விவசாயம், மின்னியல், மனையியல், தையல் போன்ற துறைகளில் பயன்படுத்தக் கூடிய உபகரணங்களே வழங்கப்பட்டுள்ளன. [இ-133]

## பண்ணாகம் வீதியை திருத்தும் வேலைகள் நாளை ஆரம்பம்

15 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் இருந்த பண்ணாகம் வீதியின் திருத்த வேலைகள் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வீதியின் அவலநிலை தொடர்பாக அப்பகுதி மக்கள் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனிடம் முறையிட்டிருந்தனர்.

இதனை அடுத்தே திருத்த வேலைகள் ஆரம்பமாகின்றன.

தொழில்நுட்ப உத்தியோகத்தர் க. வரதராஜன் சகிதம் சென்று பிரதேச சபைத் தலைவர் நேற்று இந்த வீதியைப் பார்வையிட்டார். [இ-10]

## யாழ். பல்கலைக்கழகத்தில் மண் ஆராய்ச்சி நிலையம்

வலி. தென்மேற்கு, மார்ச் 30

யாழ். பல்கலைக்கழக விவசாய விஞ்ஞான பீடத்தில் விரைவில் மண் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்க யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை முன்வந்துள்ளார்.

புத்தூர் கமநல கேந்திர நிலையத்தில் நடைபெற்ற விவசாயிகள் சம்மேளன கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்படி உறுதிமொழியை அவர் வழங்கினார்.

மேற்படி வைபவத்தில் யாழ் பல்கலைக்கழக பொது நிர்வாக பட்டப்பின் மாணவர்கள் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-185)

### கொடுப்பனவு இம்முறையும் பட்டியல்மூலமே

85 ஏ பி. புள்ளிகளுக்கான இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவு இம்முறையும் பட்டியல் மூலமே வழங்கப்படவுள்ளது

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான நிவாரணப் பொருள் கொடுப்பனவு முதலாம் திகதியில் இருந்து விநியோகம்செய்யப்படவுள்ளது.

கொழும்பில் இருந்து நிவாரண முத்திரைகள் எடுத்துவரப்படாமையினாலேயே கடந்த சில மாதங்களாக பட்டியல் மூலம் நிவாரணக் கொடுப்பனவு இடம்பெற்று வருகின்றது. (இ-86)

### லண்டன், கனடாவில் ஆன்மீக உரை

பிரபல சமயப் பேச்சாளர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்றுப் பயணமானார்.

லண்டன் ரூட்டிங் அம்மன் கோயிலின் ஏற்பாட்டில் நாளை 31 ஆம் திகதி நடைபெறவுள்ள சைவத் தமிழ் விழாவில் இவர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். அதன் பின்னர் மேற்படி ஆலய வருடாந்த உற்சவத்தின் போது தொடர் ஆன்மீக உரைகளை நிகழ்த்துவார். பிரிட்டனில் உள்ள மற்றும் பல ஆலயங்களிலும் இவரது சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

லண்டனிலிருந்து கனடா செல்லும் ஆறு திருமுருகன் அங்குள்ள சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலான பல சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆன்மீக உரைகளை நிகழ்த்துவார். இவர் மேமாத முற்பகுதியில் நாடு திரும்புவார் (அ)

## மருந்தாளர் வெற்றிடம் விரைவில் நிரப்பப்படும்

### 12 பேருக்குப் பயிற்சி முடிவடைகிறது

திருநெல்வேலி, மார்ச் 30

மருந்தாளர் (பாமசிஸ்ட்) பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டுத் தற்போது யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் தங்கி உள்ளகப் பயிற்சியைப் பெற்றுவரும் 12 பேரின் பயிற்சி இம்மாதத்துடன் முடிவடையவுள்ளது.

இவர்கள் ஏற்கனவே கொழும்பில் ஒருவருட கால மருந்தாளர் பயிற்சியை பெற்றவர்களாவார்கள்.

இந்த உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்யும் இவர்கள் விரைவில் அரசாங்க வைத்தியசாலைகளிலுள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்

இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்தாளர்களுக்கான பல வெற்றிடங்கள் கடந்த பல வருட காலமாக நிரப்பப்படாது இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. [இ-135]

### கப்பலில் தபால்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

நேற்று முன்தினம் காங்கேசன்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 505 தபாற்பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதேகப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 26 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டன என்று தபாற் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

### மீண்டும் சோதனை நிலையங்கள்

வலி. வடக்கு, மார்ச் 30

மருதனார்மடம், சுன்னாகம் பகுதிகளில் மீண்டும் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சில மாதங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் இருந்து அகற்றப்பட்ட சோதனை நிலையங்களே மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. [இ-86]

### சமய அறிவுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வெள்ளிவிழாக்காணும் இடைக்காடு இந்து நெறிக்கழகம் சமய அறிவுப்போட்டி ஒன்றை நடத்தவிருக்கின்றது.

இந்தப் போட்டியில் பத்து வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்ற முடியும் என்றும்—

போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு, முன்னர் அனுப்பலாம் என்றும்—

கழகத்தின் தலைவர் கேட்டுள்ளார். (இ-3)

## ஆசிரியர் கையேடுகள்

யாழ். மாவட்டக் கல்வி வலயங்களுக்கு ஒரு தொகுதி ஆசிரியர் கையேடுகள் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் தரம் 10, 11 வகுப்புக்களுக்கான நாடகமும் அரங்கியலும், அபிவிருத்திக் கல்வி, தரம் 9 ஆங்கிலம், தரம் 6, 7, 8, 9 கணிதம், தரம் 2 கணிதம் போன்ற ஆசிரியர் கையேடுகளே கிடைக்கப்பெற்றுள்ளன. (இ-133)

### இந்தியப் படை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் இலங்கையிலிருந்து வாபஸ் பெற்றுச் செல்லும் வரை இதனை நடைமுறைப்படுத்த சகல நடவடிக்கைகளையும்மேற்கொண்டோம்.

நாம் வாபஸ் பெறுவதற்கு முன்பே விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்திருந்தார் பிரேமதாஸா. அவர்கள் சிறந்த நண்பர்களானார்கள்.

அதனால் மூன்றாவது தரப்பான இந்தச் சமாதானப் படைக்கு அப்பொழுது தேவை இருக்கவில்லை. இதனால் தான் இந்திய சமாதானப் படை தாயகம் திரும்பியது—

இப்படி அவர் கூறினார்.

### உடை தயாரிப்பு பயிற்சி

திருநெல்வேலி, மார்ச் 30

யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் உடை தயாரிப்பு பற்றிய ஆறு மாதகாலப் பயிற்சிநெறி விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் பயிற்சி பெறுவதற்கு 40 க்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவிருப்பதாக வித்தியாலய அதிபர் து. நடராஜலிங்கம் தெரிவித்தார். (இ-135)


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்த
திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர்
திரு. க. ஜெயானந்தன்
அவர்களின் அன்புத் தந்தையார்
சுப்பையா கதிரித்தம்பி
அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அதிபர்கள் சங்கம்,
நல்லூர்க் கோட்டம்.

(74940)



## இதய அஞ்சலி

21—03—2000 அன்று கொழும்பில் காலமான
எமது நிலையத்தின் முன்னாள் தலைவர்
கந்தையா இராசரத்தினம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ சபாபதி நாவலர் சனசமூக நிலையம்
கோப்பாய் வடக்கு.

(74947)

உதயன்

# ஆயிரக்கணக்கான பொது மக்கள் பாடசாலைகள், ஆலயங்களில் தஞ்சம்

## வெளித்தொடர்புகளை இழந்த நிலையில் பளை நகரப் பகுதி

தென்மராட்சி, மார்ச் 30
பளைப் பகுதியில் இடம்பெறும் ஷெல்வீச்சுக்களால் பளைப் பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளான கச்சார்வெளி, செல்வபுரம், வேம்பொடுகேணி, இத்தாவில், முகமாலை, இந்திராபுரம், மடத்தடி ஆகிய இடங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் நேற்று முன்தினம் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்

அனேகமாக இப்பகுதிகளிலிருந்த அனைத்துக் குடும்பங்களும் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளன.

நேற்று முன்தினம் பகல் கிளாலிப் பகுதியில் ஷெல் வீச்சு நடத்தப்பட்டதையடுத்து கிளாலி, எழுதுமட்டுவாழ் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 75 சதவீதமான மக்கள் வெளியேறி இருந்தனர் நேற்று மேலும் பலர் வெளியேறி உள்ளனர்.

மிருசுவில் பகுதியில் உள்ள தேவாலயங்கள், பாடசாலைகள், இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 1.40 மணி தொடக்கம் நேற்று முன்தினம் பகல் 3.30 மணிவரை 700 க்கும் மேற்பட்ட ஷெல்கள் இத்தாவில் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. இப் பகுதியில் உள்ள வீடுகளும் பாடசாலை ஒன்றும் ஷெல் வீச்சினால் சேதமடைந்துள்ளன. வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலையே சேதம் அடைந்த பாடசாலை ஆகும். வீடுகளுடன் மூன்று கடைகளும் சேதமடைந்துள்ளன. ஒரு கடையின் அருகில் வீழ்ந்த ஷெல் சிதறலினால் அங்கிருந்த எண்ணெய் பரலில் இருந்த எண்ணெய் முற்றாக வெளியேறி இருந்தது.

பூநகரி, ஆனையிறவு, இயக்கச்சி, தர்மக்கேணி, கிளாலி, அல்லாரை, கொடிகாமம் ஆகிய பகுதிகளிலிருந்து தொடர்ச்சியாக சராசரியாக விநாடிக்கு நான்கு ஷெல்கள் வீதம் செல்வபுரம், கச்சார்வெளி, இத்தாவில் பகுதிகளில் வீழ்ந்த வண்ணமிருந்தன.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணி தொடக்கம் நேற்று அதிகாலை வரை ஷெல் வீச்சுக்களும் துப்பாக்கிப் பிரயோகமும் இடைவிடாது கேட்டதாக எழுதுமட்டுவாழ், மிருசுவில், ஒட்டுவெளி ஆகிய பகுதிகளிலிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மோதலில் காயமடைந்த நூற்றுக்கு மேற்பட்ட படையினரை மூன்று பஸ்களில் ஏற்றிக் கொண்டு சென்றதைக் காண முடிந்தது. நேற்றுக் காலை முதல் ஹெலிக்கொப்டர்கள் பலாலியிலிருந்து அடிக்கடி பளைக்குச் சென்று வருவதையும் காண முடிகிறது.

இதேவேளை பெருமளவு படையினர் ஆயுத தளபாடங்களுடன் வாகனங்களில் பளை நோக்கி கண்டி வீதியூடாகச் சென்று கொண்டிருந்தனர்.

பளை நகர்ப்பகுதிக்குள் எவரும் செல்ல முடியாததாலும் அங்கிருந்து வெளியே செல்ல எவரும் அனுமதிக்கப்படாததாலும் பிரதேசத்தில் உள்ள 12 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் வெளித் தொடர்புகள் எதுவுமற்ற நிலையில் உள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது தேவைகளுக்காக இப் பகுதிகளிலிருந்து தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி ஆகிய இடங்களுக்குச் சென்ற பொது மக்கள் மீண்டும் தமது உறவினர்களுடன் இணைவதற்காகவும், பளையில் உள்ள உறவினர்களின் தகவல்களை அறிவதற்காகவும் எழுதுமட்டுவாழ், மிருசுவில் ஆகிய இடங்களில் காத்திருக்கின்றனர்.

இலங்கை மின்சார சபையின் பளையில் உள்ள ஜெனரேற்றரை இயக்கச் சென்ற இரு ஊழியர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பி வர முடியாத நிலையில் உள்ளனர்

(இ-117)

## மீண்டிக் கட்டையாவதா?

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான பேச்சுக்கள், இப்பகுதியை எழுதிக் கொண்டிருந்த போது, நேற்று மூற்பகலில், நான்காவது தடவையாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அவர்கள் ஏற்கனவே மூன்று தடவைகள் கூடிப் பேசியவை இனப்பிரச்சினையின் முதன்மையான, பிரதான விடயங்கள் அல்லாத, வேறு வேண்டாப் பொருள்கள் பற்றியதே.

ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்து வகுக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வில் ஆட்சிமுறை எத்தகையது, அதிகாரப் பரவல் அலகு என்ன, அதற்கான அதிகாரங்கள் எவை, என்பனவே முதன்மையாக இணக்கம் காணப்பட வேண்டியவை.

அவற்றைப் பின் அடைவணைக்குத் தட்டித் தள்ளி விட்டு, அக்கறையும் முக்கியத்துவமும் இல்லாத ஆளுநரின் நியமனம், உப ஜனாதிபதிப் பதவிகளை உருவாக்குவது போன்ற விடயங்கள் குறித்தே இருதரப்புகளும் ஆராய்ந்துள்ளன.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அட்டவணை வகுத்து விரைந்து செயற்படப் போவதாகப் பிரமாதப்படுத்தியவர் ஜனாதிபதி. தீர்வுக்கான முக்கிய உட்பொருள்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்து ஆராயாமல் கோதான விடயங்களை ஆராய்வது வீண் காலதாமதத்தை உண்டாக்குவதாகும்: அர்த்தமற்றதுமாகும்.

அதிகாரப் பரவல் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட இருப்பது பிராந்திய சபைகளா அல்லது மாகாண சபைகளா; இலங்கை, பிராந்தியங்களின் ஒன்றியமாக இருக்குமா அல்லது மாகாணங்களைத் தன்னகத்தே கொண்ட ஐக்கிய நாடாக இருக்குமா என்பனவே முதலில் இணக்கம் காணப்பட வேண்டிய முக்கிய விடயங்கள். அடுத்து பிராந்திய சபைகளின் அல்லது மாகாண சபைகளின் அதிகாரங்கள் எந்தளவுக்குச் சுயாட்சி வலுவுள்ளவையாக இருக்கும் என்று நிர்ணயிக்கப்பட வேண்டும்; அவை குறித்தும் இணக்கம் தேவை.

முந்திய மூன்று சந்திப்புக்களின் போதும் இந்த அம்சங்களை ஆழ அகலமாக ஆராய்ந்திருக்க வேண்டும். அப்போதுதான் அரச — எதிர்க்கட்சிகள் அர்த்த புஷ்டியான, ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளன என்ற நம்பிக்கை சிறுபான்மைத் தரப்புகளுக்கு ஏற்பட வாய்ப்பிருக்கும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தெற்கின் இரண்டு பிரதான அணிகள் பேச்சு நடத்தி இணக்கம் காண்பதற்கு முன்வந்திருப்பது, ஒத்துழைப்பு நல்க முன்வந்திருப்பது, ஒரு திருப்புமுனை என்று சிறுபான்மை மக்கள் கருதுகிறார்கள்.

ஆனால் இவர்களோ பேச வேண்டியதைப் பேசாமல், பிரதான விடயங்களைப் பேசாமல், உப விடயங்களையும் முக்கியமற்றவற்றையும் பேசி சிறுபான்மை இனமக்கள் மனங்களில் துளிர்த்த சிறு நம்பிக்கையையும் கருக்கிவிடக் கங்கணம் கட்டுகிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது.

முக்கிய அம்சங்களில் ஆக்கபூர்வமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்காவிடில் அரசு — எதிர்க்கட்சிப் பேச்சு வெறும் மீண்டிக் கட்டையாக சமாதான முயற்சியைப் புரட்டி வீழ்த்தி விடும்!

### பட்டதாரிகளான

## தகுதிகாண் பயிலுநர் ஆசிரியர் தமக்கெனச் சங்கம் அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30
பட்டதாரிகளான தகுதிகாண் பயிலுநர் ஆசிரியர்கள் தமக்கெனச் சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கல்வி அமைச்சின் யா.ந/ஆ/ 5-11-92 சுற்றறிக்கையின் படி 6-10-1994 வரை பட்டதாரிச் சித்திபெற்றுள்ள தகுதிகாண் பயிலுநர் ஆசிரியர்கள் ஒரு வருடப் பூர்த்தியுடன் நிரந்தரப் பட்டதராிகளாக உள்வாங்கப்பட்டனர். அதன் பின்னர் இந்த நடைமுறை கைவிடப்பட்டது. இதைத் தொடருமாறு பல தொழிற்சங்கங்கள் வலியுறுத்த 99/05 ஆம் இலக்க சுற்றறிக்கையைக் கல்வி அமைச்சு 30 - 11 - 99 இல் வெளியிட்டது.

- இதன்படி பயிலுநர் தகுதிகாண் ஆசிரியர்களாக இருந்தால் நான்கு வருட நிறைவு தினமே பட்டதாரித் தகைமை பெறும் தினமாகக் கொள்ளப்படும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிபந்தனையை நீக்கி முன்னர் போல பட்டதாரியாகி ஒரு வருட நிறைவுடன் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பட்டதாரிஆசிரியர் வாண்மை விருத்தி அமைப்பு கல்வி அமைச்சின் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது.

தற்போதைய நிதிநிலைமையில் நான்கு வருடப் பூர்த்தியுடனேயே பட்டதாரி ஆசிரியராக உள்வாங்கப்படுவர் என்றும் அவர்களது சேவைக் காலத்தைக் கணக்கில் எடுக்க நடவடிக்கைகள் எடுப்பதாகவும் உறுதியும் கூறப்பட்டு பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரிய கலாசாலைகளுக்குச் செல்லத் தேவையில்லை, அவர்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறியையே மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள பட்டதாரிச் சித்தி பெற்றுள்ள தகுதிகாண் பயிலுநர் ஆசிரியர்கள் தாம் ஒரு வருட சேவைப் பூர்த்தியுடன் உள்வாங்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் ''பட்டதாரிகளான தகுதி காண் பயிலுநர் ஆசிரியர் சங்கம்'' என்ற அமைப்பை க. தயாபரன் தலைமையில் உருவாக்கி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## நாளை

பங்குனி 18
வெள்ளிக்கிழமை
திதி: ஏகாதசி
நள்ளிரவு 11 56 வரை
நட்சத்திரம்: திருவோணம்
முற்பகல் 11.55 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 6 11 7 41
ராகுகாலம்: 10 41 – 12 11
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தவக்காலச் சிந்தனை

(இருபத்துமூன்றாம்நாள்)

அமைதி இழந்து, ஆறுதல் இழந்து துன்பத்துடன் துவளும் மக்களின் தேவைகளை அறிபவர் இறைவன் ஒருவரே. எந்நேரத்திலும் எவ்வேளையிலும் எமது தேவைகளுக்காக அவரிடம் செல்லும் போது உதவிக்கரம் நீட்டி வேதனைகளைத் தணிப்பார். பல வகையான வல்ல செயல்களையும் ஆற்றுபவர் தாம் எம் இறைவன் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு கருணை உள்ளத்தோடு தமது வல்லமையை வெளிப்படுத்துவார். பசியாய் இருந்த மக்களுக்கு உணவு அளித்தார்; நோய்வாய்ப்பட்டோரைக் குணமாக்கினார்; இறந்தோரை உயிர்ப்பித்தார்; சாத்தானின் ஆட்சியில் இருந்தோருக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார்.

இவ்வாறு பற்பல வல்ல செயல்கள் மூலம் தன் தந்தையாகிய பிதாவையே மகிமைப் படுத்தினார். ஆனால் அன்று வாழ்ந்த மக்கள் அவரது அரும் பெரும் செயல்களைக் கண்டும் காணாதவர்கள் போன்று வாழ்ந்தார்கள். பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டு இவன் பேய்களை ஓட்டுகிறான் என்று வீணான பெயரும் அவருக்குச் சூட்டினார்கள்.

ஆம்; இன்றும் எம் சமுதாயத்தில் ஒருவர் நற்செயல் புரிந்தால் அவரை உயர்த்துவதில்லை. மாறாக அவரது பெயரைக் குட்டிச் சுவராக்குகின்றோம். இறைவன் அன்று வாழ்ந்த பாமர மக்களின் குற்றங்குறைகளைப் பாராது எல்லோரையும் ஏற்று வாழ்ந்தார். அதே போல் நாமும் மற்றவர்களையும் எம் வாழ்வில் சேர்த்து தேவனுக்கு உகந்த நல்ல உள்ளத்துடன் வாழ அவரது உதவியை நாடி அவருடன் ஒன்றிப் போம்.

எஸ். மரியநாயகம்
(தாளையடி)

## கல்லூரிக்கு காணி

சண்டிலிப்பாய், மார்ச் 30
அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள வீட்டுடன் கூடிய ஆறு பரப்புக் காணி, கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளை அனுப்பிய நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டியைச் சேர்ந்த பொன்னம்பலம் — செல்லம்மா தம்பதியரின் ஞாபகார்த்தமாக இந்தப் பணம் அனுப்பப்பட்டது.

இந்தக் காணியிலுள்ள வீட்டில் கல்லூரியின் சங்கீத வகுப்பும் நடன வகுப்பும் இடம்பெறவிருப்பதாகக் கல்லூரி அதிபர் கி. மகேந்திரராஜா தெரிவித்தார். (இ-135)

## சிறுவர் பூங்கா

திருநெல்வேலி, மார்ச் 30
புதிய ஆரம்பக் கல்வி மறுசீரமைப்புத் திட்டத்துக்கு ஏற்ப யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது.

சிறுவர் பூங்காவுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் பலவற்றை இங்குள்ள மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர் என்று மகாவித்தியாலய அதிபர் து. நடராஜலிங்கம் தெரிவித்தார்.

(இ-135)

## உதய வாக்கு

இன்பத்தை அனுபவிப்பதாக நினைக்கும் மனிதன் அதற்குத்தான் அடிமைப்படுவதாக உணருவதில்லை.

- பெஞ்சமின் பிராங்க்ளின்



## சாயி சிந்தனை

எல்லா அறிவியல் வல்லுநர்களும் இவ்வுலகம் முழுவதும் அணுக்கள் நிறைந்திருப்பதாகக் கூறுகின்றனர். வேதாந்தமும் கூட எல்லா இடத்திலும் தெய்வீகம் நிறைந்திருப்பதாகக் கூறுகின்றன. ஸர்வம் கல்விதம் பிரம்மா — ஆனால் பெயர்கள் தான் வேறு வேறு விஞ்ஞானிகள் அவற்றை அணு என்கின்றனர். ஆன்மீகவாதிகள் அவற்றைப் பிரமன் என்கின்றனர். அணு இல்லாத இடம் இல்லை. இதில் பெயர்கள் தான் வேறு. நாம் சரியான முறையில் அன்பு செலுத்த வேண்டும். அன்புடன் கூடிய வாழ்க்கை உங்களை இறைவனின் அருகிற்கு அழைத்துச் செல்லும்.

ஆதாரம்: சனாதன சாரதி

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

உடுவில் மதவடி முதலாம் கட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிருஷ்ணமூர்த்தி என்பவரது தே. அ. அ., விசேட அடையாள அட்டை என்பன மானிப்பாய் வீதியில் 28-03-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். [74929]

அராலி கிழக்கு, அராலி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பொன்ராசா சுலோசனாதேவி என்பவரின் தே. அ. அ. (இல. 646593360V), வி. அ. அ [இல. 090408844] இரண்டும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். [[74903]

### மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய் தோஷமற்ற பாவம் குறைந்த 40 வயது போதனாசிரியருக்கும், 28 வயது செவ்வாய் தோஷமற்ற சகோதரிக்கும் பெற்றோர் பொருத்தமான மணமக்களைத் தேடுகின்றனர். தொடர்பு: கே. கமலா C/o சு. விஜயகுமார், அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(74870)

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி புகையிரத நிலைய ஒழுங்கையில் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்டதுமான 2½ பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: எல். ஜேசுதாசன் C/o தியாகராஜா, ''லக்ஸ்மி வாசா'', நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(சி/11565)

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து 500 யார் தொலைவுக்குள் கடற்கரை வீதி, ஆழ்வார் ஒழுங்கையில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: சி. சிவபாலசுந்தரம், வி. எம். றோட், பருத்தித்துறை.

(சி/11557)

### வாடகைக்கு

யாழ். நகரில் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் பேக்கரியும் அதனுடன் கூடிய கடையும் உடன் வாடகைக்கு விடப்படும். தொலைபேசி வசதியும் உண்டு. தொடர்பு: 65, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

(74924)

யாழ். நகரை அண்டிய மையப்பகுதியிலும் மக்கள் குடியிருப்பு நிறைந்த பிரபல பாடசாலை, அலுவலகங்களுக்கு அருகிலும் இருபது வருடங்களுக்கு மேல் வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரபல பல சரக்கு வர்த்தக வியாபார ஸ்தாபனம் வாடகைக்கு உண்டு. தொடர்பு:- விளம்பர இல. 1033, மே/பா உதயன்.

(சி/11524)

முன்பள்ளி
பாலர் ஆசிரியராக
**பயிற்சி**

தபால்வழி ஆறுமாதப் பயிற்சி
க. பொ. த. (சா/த)
கடைசித்தகைமை
விவரங்களுக்கு:
**பாலர் ஆசிரியர் சங்கம்,**
கொக்குவில்.

(74843)

### பலகை விற்பனைக்கு

புதிதாக அரியப்பட்ட தென்னம்பலகைகள் [ரியூசன் வகுப்புகள் நடத்துவதற்கு உரிய வாங்கு மேசைகளுக்குரியவை] விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- A. ராகவன், 3 ஆம் கட்டை, கல்வியங்காடு.

[74909]

### பெரியமொழி ஜோதிடம்

தொழில் பிரச்சினை, கல்வித்தடை, விவாகத்தடை தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வரவும். ஞாயிற்றுக்கிழமைகளில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சனி, செவ்வாய்க் கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும் சந்திக்கலாம்.

(74915)

### முயல் விற்பனைக்கு

ஒரு சோடி வெள்ளை முயலும் (சடை, வயது 2 மாதம்) அத்துடன் 1 பெண் முயலும் 2 குட்டிகளும் (குட்டிகளின் வயது 2 கிழமை). தொடர்பு: சின்னையா-சாம் (Sam), A. M. T. M. பாடசாலை (அருகில்), 541, நவாலி தெற்கு, மானிப்பாய். (74900)

### NEW TYPE WRITER SALE

Adler (Japan) Phoenix Sigma — III (Japan) Olympia Carina — 2 (Japan) விற்பனைக்கு உண்டு. 154, கன்னாதிட்டி றோட், [சயன்ஸ் அக்கடமிக்கு அருகில்] யாழ்ப்பாணம்.

[74921]

### விற்பனைக்கு

20'' Colour T.V, 12', Black & White T.V, Iron Box, Suitcase, Wall Clock, Blanket, Gate, Motor, Stablizer (2 KVA—Japan), அலுமாரி, குளிர் சாதனப் பெட்டி, சாப்பாட்டு மேசை என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வே. குமாரசாமி, பெரிய அரசடி, சாவகச்சேரி.

(74907)

## பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

பருத்தித்துறை புலோலி ஞானவைரவர் திருக்கோயிலில் இன்று (30-03-2000) வியாழக்கிழமை பகல் 10 மணி முதல் 11 மணி வரையிலான சுப முகூர்த்தத்தில் பாலஸ்தாபனம் நடைபெறும்.

**பிரதமகுரு**
சிவாகம கிரியாதத்துவநிதி
பிரம்மஸ்ரீ - தாணு - வாசுதேவசிவாச்சாரியார்
சிவன்கோயில், இணுவில்.

சாதகாசாரியார்
பிரம்மஸ்ரீ - சே. சிவபாலசர்மா - இணுவில்.

**அனைவரும் வருக.**

சிவஸ்ரீ சி. சபாரத்தின தேசிகர்
ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ - . பொன்னம்பலக்குருக்கள்
பரம்பரை ஆதீன கர்த்தா

(74942)

## நன்றி செலுத்தும் வழிபாடு

தந்தை **S. J. V** செல்வநாயகம்
அவர்களின் வாழ்வின்
102 ஆம் ஆண்டு நிறைவு ஞாபகார்த்த ஆராதனை

இடம்: **பரியோவான் ஆலயம், சுண்டுக்குளி**
காலம்: **நாளை (2000 - 03 - 31) வெள்ளி**
மாலை 4.30 மணி (S.L.T.)

பாராட்டுரை: திரு. S. சகாயசிலன்
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

இறைசெய்தி: அருள் பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
(அதிபர், புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.)

யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

அருள் பிதா S.E. ஜெயசிலன்
தலைவர்
ஒன்றிப்பு ஆணைக்குழு
கத்தோலிக்க மறைமாவட்டம்
யாழ்ப்பாணம்.

அருள் பிதா A.A. போல்
தலைவர்
யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்

(74939)

## கண்ணீர் அஞ்சலி

**மதியாபரணம் பவானந்தன்** அவர்கள்
[இளைப்பாறிய ஆசிரியர்,
யா/ நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை]

இந்தியாவில் இறைபதம் எய்தியமையை கேள்வியுற்று அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/ நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை.**

[74932]

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், மார்ச் 30
யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் [இம் மாதம் 29 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

(122482ஏ), (124773ஏ), (126666ஏ), (126969ஏ), (128429ஏ), (130123ஏ), (130123பி), (130293ஏ), (130437ஏ), (131335ஏ), (131335பி).

(131335சி), (131991ஏ), (131991பி), (132141ஏ), (132141பி), (132141சி), (132141டி), (132141ஈ), (132141எவ்), (132269ஏ), (132269பி).

(132291ஏ), (132291பி), (132291சி), (132291டி), (132291ஈ), (132291எவ்), (132333ஏ), (132333பி), (132423ஏ), (137083ஏ), (137217ஏ)

(137230ஏ), (137300ஏ), (137315ஏ), (137339ஏ), (137359ஏ), (137377ஏ), (137377பி), (137377சி), (137377டி), (138695ஏ), (138708ஏ), (138709ஏ),

(138711ஏ), (138711பி), (138711சி), (138711டி), (138711ஈ), (138713ஏ), (138713பி), (138713சி), (138803ஏ), (138803பி), (138805ஏ), (138821ஏ), (138858ஏ),

(138863ஏ), (138873ஏ), (138897ஏ), (138897பி), (138897சி), (138922ஏ), (138922பி), (138923ஏ), (138930ஏ), (138936ஏ), (138936பி), (138936சி), (138936டி),

(138937ஏ), (138937பி), (138955ஏ), (138957ஏ), (138965ஏ), (138965பி), (138969ஏ), (138985ஏ), (138985பி), (138985சி), (138988ஏ), (139002பி), (139010ஏ), (139014ஏ), (139024ஏ), (139033ஏ), (139034ஏ), (139048ஏ), (139048பி), (139048சி), (139049ஏ), (139059ஏ), (139056ஏ), (139062ஏ), (139064ஏ), (139068ஏ), (139068பி).

(139068சி), (139068 டி), (139076 ஏ), (139080 ஏ), (139080 பி), (139081 ஏ), (139081 பி), (139081 சி), (139081 டி), (139082 ஏ), (139082 பி), (139084 ஏ), (139084 பி), (139085 ஏ), (139085 பி), (139086 ஏ), (139086 பி), (139088 ஏ), (139091 ஏ), (139100 ஏ), (139106 ஏ), (139106 பி), (139108 ஏ), (139116 ஏ), (139116 பி), (139122 ஏ), (139122 பி), (139124 ஏ), (139135 ஏ), (139135 பி),

[139142 ஏ], [139142பி]' [139162 ஏ], [139166 ஏ], [139166 பி], [139169ஏ], [139170 ஏ], [139170பி], [139170 சி], [139171ஏ], [139176ஏ], [139177 ஏ], [139177 பி], [139177சி], [139177டி],

[139180 ஏ], [139180பி], [139928 ஏ], [140381 ஏ], [140382 ஏ], [140384 ஏ], [140384 பி], [140384 சி], [140385 ஏ], [140387 ஏ], [140387பி], [140387 சி], [140393ஏ], [140393 பி].

(140395 ஏ), (140395பி), (140397 ஏ), (140400 ஏ), (140400 பி), (140400 சி), (140401 ஏ), (140401 பி), (140403 ஏ), (140406 ஏ), (140406 பி), (40409 ஏ), (140412 ஏ), (140415 ஏ), (140416 ஏ), (140417 ஏ), (140418 ஏ), (140422 ஏ), 140422 பி), (140422 சி), (140428 ஏ), (140439 ஏ), (140439 பி), (140441 ஏ), (140445 ஏ), (140448 ஏ], [140448 பி], [140448 சி], (140448 டி], [140448 ஈ], (140450ஏ), (140453ஏ), (140454ஏ), (140455ஏ), (140456ஏ), (140457ஏ), (140457பி), (140458ஏ), (140459ஏ), (140465ஏ), [140469ஏ), (140472ஏ), (140475ஏ), (140483ஏ), (140483பி), (140485ஏ), (140492ஏ);

(140493ஏ), (140494ஏ), (140494பி), (140495ஏ), (140495பி), (140497ஏ), (140498ஏ), (140502ஏ), (140503ஏ), (140506ஏ), (140506பி), (140506சி), (140506டி), (140506ஈ), (140509ஏ), (140514ஏ),

(140523ஏ), (140523பி), (140524ஏ), (140524பி), (140524சி), (140524டி), (140525ஏ), (140529ஏ), (140534ஏ), (140535ஏ), (140536ஏ), (140536பி), (140536சி), (140538ஏ), (140538பி), (140538சி),

(140539ஏ), (140547ஏ), (140562ஏ), (140564ஏ), (140564பி), (140571ஏ), (140572ஏ), (140577ஏ), (140577பி), (140578ஏ), (140578பி), (140580ஏ), (140583ஏ), (140587ஏ), (140588ஏ).

(140596ஏ), (140597ஏ), (140597பி), (140598ஏ), (140602ஏ), (140609ஏ), (140622ஏ), (140624ஏ), (140625ஏ), (140625பி), (140630ஏ).

(140643ஏ), (140643பி), (140648ஏ), (140658ஏ), (140658சி), (140658டி), (140658ஈ), (140658எவ்), (140658ஜி), (140659ஏ), (140659பி), (140659சி), (140660ஏ).

(140660பி), (140660சி), (140660டி), (140660ஈ), (140672ஏ), (140689ஏ), (140690ஏ), (140697ஏ), (140698ஏ), (140700ஏ), (140718ஏ), (140719ஏ), (140720ஏ), (140724ஏ), (140743ஏ),

[140753 ஏ], [140754 ஏ], [140763 ஏ], ]140765 ஏ], [140766 ஏ], [140767 ஏ], [140768 ஏ], [140771 ஏ], [140774 ஏ], [140788 ஏ], [140788 பி], [140788சி], [140822 ஏ], [140851 ஏ], [140851 பி], [149533ஏ],

**நல்லூர்**

(123308 ஏ), (123308 பி), (128810 ஏ), (128810பி), (130494 ஏ), (130494பி), (130494 சி), (131980 ஏ), (131980 பி), (132285 ஏ)' (137369 ஏ).

(137369பி), (137369சி), [138168ஏ], [138168பி], [138168சி], [138168டி], [138168ஈ], [138723ஏ], [138981ஏ], [139012ஏ], [139012பி], [139016ஏ], [139059ஏ], [139059பி].

(139059சி), (139779ஏ), (139779பி), (139779சி), (139779டி), (140460ஏ), (140460பி), (140460சி), (140528ஏ), )140528பி), (140537ஏ), (140591ஏ), (140769ஏ), (140769பி), (140769சி), (140769டி), (140769ஈ).

(க)

## நினைவுநாள்

யாழ்ப்பாணம், மார்ச் 30
சிவானந்தர் சிறுவர் பாடசாலையின் போஷகர் சச்சிதானந்த மாதாஜியின் நினைவுநாள் எதிர்வரும் சனிக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.

அன்று காலை 9 மணிக்கு திருவடிப் பூசை அபிஷேகத்துடன் நிகழ்வுகள் நடைபெறும்.

(இ—க)

# மனித உரிமை மீறல்களில் தொடர்புடைய படையினருக்கு பரிசில்கள், பதவி உயர்வுகள்

## ஐ. நாவுக்கு சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிப்பு

ஜெனீவா, மார்ச் 30

தண்டனையில் இருந்து தப்பும் படையினரின் எண்ணிக்கை இலங்கையில் பெருமளவில் அதிகரித்துள்ளது. மிகப் பல மனித உரிமை மீறல்—சம்பவங்களில் சம்பந்தப்பட்ட படையினர் பதவி உயர்வும், ஜனாதிபதியின் பரிசில்களும் பெற்றுள்ளனர்.

ஐ. நாவின் மனித உரிமை ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 56 ஆவது கூட்டத் தொடர் ஜெனீவா நகரில் நடைபெற்றுவருகிறது. தமிழர் மனித உரிமைகள் மையத்தினால் இக்கூடத்தொடருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச் செயலாளர் ச. வி. கிருபாகரன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். அறிக்கையின் முழு விவரமும் வருமாறு;—

அன்புடையீர்,

அனைவருக்கும் முதற்கண் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். முன்னைய ஆண்டுகளை விட இந்த ஆண்டு தமிழர் மனித உரிமைகள் மையம் தனது முறைப்பாடுகள் அடங்கிய மனுவை உங்கள் முன் ஆழ்ந்த கவலையுடன் இதயம் உடைந்த நிலையில் சமர்ப்பிக்கின்றது.

கடந்த சில ஆண்டுகளாக சிறிலங்காவிலிருந்து வந்து இக்கூட்டத்தொடர்களில் கலந்து கொண்ட மனித உரிமையின் காவலர் குமார் பொன்னம்பலம் அவர்கள் தற்பொழுது எம்முடன் இல்லை. இவர் கடந்த ஜனவரி மாதம் 5ம் திகதி சிறிலங்காவின் தலைநகரான கொழும்பில் இனந்தெரியாத கொலையாளி எனச் சொல்லப்படும் ஒருவரால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த 55 வது கூட்டத் தொடரில் தமிழர்களின் மனித உரிமைகள் பற்றி எடுத்துரைத்தது மட்டுமின்றி சிறிலங்காவில் தனக்கு ஏற்பட்டுள்ள உயிராபத்தின் அச்சுறுத்தல் பற்றியும் ஐ. நா. மனித உரிமைகள ஸ்தாபனத்தில் பணியாற்றும் பல முக்கியஸ்தர்களுக்கு முன்கூட்டியே கூறியிருந்தார். பலருக்குப் பலதடவைகள் தான் எவ்வேளையிலும் சிறிலங்கா அரசினால் கொலை செய்யப்படலாம் என்றும் ஆருடம் கூறியிருந்தார். யார் இவரைக் கொன்றது? பதில் மிகவும் இலகுவானது! யார் இவர் இறப்பினால் நன்மை அடைகிறார்களோ அவர்களோ!

### குமார் கொலை மூடிமறைப்பு

இப் படுகொலை பற்றிய விபரங்கள் வரிசையாக இந்த மனுவில் சேர்க்கப்பட்டுள்ளன இந்த மனித உரிமைக் கூட்டத்தொடரின் முக்கியஸ்தர் என்ற நிலையில், இக் கொலையை யார் செய்திருப்பார்கள் என்பதை நடுநிலையாளர்கள் என்ற முறையில் அறிந்துகொள்ள உரிமை உள்ளீர்கள். இப்படுகொலை, தமிழர்களின் மனித உரிமை மீறல்களை எடுத்துரைக்கும் எம் அனைவருக்கும் அறியத் தருவது யாதெனின் நாங்கள் அனைவரும் இப்படியான அரச படுகொலைகளில் இருந்து தப்பமுடியாது என்பதே ஆகும்! நாம் அனைவரும் தொடர்ந்து இம்மனித உரிமைக் கூட்டத்தொடரில் சமுகமளிப்போமா என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

குமார் பொன்னம்பலத்தின் படுகொலைக்குப் பல தடயங்கள் இருந்தும் இன்று வரை நேர்மையான உண்மையான விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை! அதே வேளை பல மூடி மறைப்புகளும் சாதுரியமான செயல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இன்று வரை கொலையாளிகளை நேரிற் கண்ட சாட்சிகள் அழைகப்பட்டு அடையாள அணிவகுப்பு எதுவும் நடைபெறவில்லை! ஆனால் விசாரணையாளர்களோ பல கண்துடைப்பான செய்திகளை— கொலையாளிகள் அடையாளம் காணப்பட்டுவிட்டனர் என்ற பொய்யை — வெளியிட்டு வந்துள்ளனர். விசாரணையாளர்களின் இத்தகைய செயற்பாடு உண்மையான கொலையாளிகளைப் பாதுகாக்கும் செயலாக அமைகிறது.

தமிழர் மனித உரிமைகள் மையம் குமார் பொன்னம்பலம் அவர்கள் எதிர் நோக்கியிருந்த அபாயம் குறித்து ஐ. நா. மனித உரிமை ஸ்தானிகருக்கு 1998 ஆம் ஆண்டு தெரியப்படுத்தியிருந்தது.

இலங்கைத் தீவில் தமிழரின் மனித உரிமைகள் தொடர்ந்தும் மிக மோசமான நிலையில் உள்ளன. பாடசாலைகள், வைத்தியசாலைகள், தேவாலயங்கள் விமானக்குண்டு வீச்சுக்குத் தொடர்ந்து இலக்காகி வருகின்றன. கடந்த மார்கழிமாதம் மடு தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த 42 அப்பாவித் தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் பயங்கரமான முறையில் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் செம்மணியில் இனம் காணப்பட்ட இரு காணாமற்போன நபர்களின் உறவினர்களுக்கு ஸ்ரீலங்கா அரசினால் ''அவர்களைத் தேடமுடியாமல் உள்ளோம்'' என அனுப்பிய கடிதம் ஸ்ரீலங்கா அரசின் மனிதாபிமானமற்ற அலட்சியமான செயலை எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் மக்கள் மீதான சித்திரவதை, தன்னிச்சையான கைதுகள், தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறை, கொலைகள் அரச படைகளினால் மிக மோசமாகத் தொடர்கின்றன.

இலங்கைத் தீவின் வடகிழக்கில் உணவு, சுகாதாரம், கல்வி, தொழில் போன்ற பொருளாதார சமுக நிலைமை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அண்மையில் வெளியாகிய அமெரிக்க ராஜாங்க அமைச்சு, மனித உரிமை கண்காணிப்புக் குழு' ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் அறிக்கைகள் இவற்றுக்குச் சான்று வழங்குகின்றன.

கொழும்பில் தமிழ் மக்கள், 'தமிழர்' என்ற ஒரே காரணத்திற்காக கைது செய்யப்படுகின்றனர்.

சிறிலங்காவில் தண்டனையிலிருந்து தப்பும் படையினரின் தொகை பெருமளவில் அதிகாரித்துள்ளது. அரச பயங்கரவாதச் சட்டம், அவசரகால நிலைமை என்பவற்றைப் பயன்படுத்தி தமிழ் மக்களைக் கைது செய்ய. சித்திரவதை செய்ய, கொலை செய்ய அரச படைகள் சுதந்திரம் பெற்றுள்ளனர்! பெரும் தொகையான மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்ட அரச படைகள் பதவி உயர்வும், ஜனாதிபதி பரிசில்களும் பெற்றுள்ளனர். சிறிலங்காவில் மனிதஉரிமையைப் பொறுத்த வரையில் இப்படியான முன்னேற்றங்களை மட்டுமே நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அவைத் தலைவர் அவர்களே;

குமார் பொன்னம்பலம் அவர்களின் படுகொலையை விசாரிக்க. சுதந்திரமான, பொதுவான ஒரு குழுவை நியமிக்குமாறு, சிறிலங்கா அரசைக் கேட்குமாறு தமிழர் மனித உரிமைகள் மையம் இந்த 56வது கூட்டத்தொடரிடம் வேண்டிக்கொள்கிறது.

அத்துடன் இக்கூட்டத்தொடர், கடந்த 10ஆண்டுகளாக தமிழ்ப்பகுதிகளில் அமுலில் இருந்து வரும் பொருளாதாரத் தடையை விலக்கவும், மனித உரிமைகளை மதிக்கவும்; செம்மணி விவகாரத்தை விசாரிக்க ஒரு சுதந்திரமான குழுவை நியமிக்கவும், பத்திரிகைத்தணிக்கையை விலக்கவும், சிறிலங்காவில் உள்ள சகல அரசியல் கைதிகளை விடுதலைச் செய்யவும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கவும், ஒழுக்கமற்ற சிறிலங்கா அரசபடைகளை தமிழ் பகுதிகளில் இருந்து விலக்குமாறும் சிறிலங்கா அரசை நிர்ப்பந்திக்குமாறு வேண்டிக் கொள்கிறது — எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

# இலவச பாட நூல்களில் இதுவரை 2½ லட்சம் இங்கு வந்துசேரவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான 5 லட்சத்து 85 ஆயிரம் தமிழ்மொழிமூல இலவச பாடநூல்களில் 3 இலட்சத்து 30 ஆயிரம் பாடநூல்களே அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

புதிய ஆண்டு ஆரம்பமாகி முதலாம் தவணைக்குரிய பரீட்சைகள் நடைபெறுகின்ற போதும் மிகுதிப் பாடநூல்கள் இன்னும் வழங்கப்படவில்லை.

இதனால் மாணவர்கள் தமது பாடங்களைக் கற்க முடியாது பெரிதும் கஷ்டப்படுவதாகக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டும் இதே போன்று யாழ். மாவட்டத்துக்கான பாடநூல்கள் மூன்று தடவைகள் எடுத்து வரப்பட்டே வழங்கப்பட்டன. இந்த ஆண்டும் மிகுதிப் பாடநூல்களை எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் அவை இன்னும் வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-10-5)

# ஓர் இளைஞனும் 3 யுவதிகளும் யாழ். சிறைக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிலிருந்து யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்ட மூன்று யுவதிகளையும் ஓர் இளைஞனையும் ஏப்ரல் 10 ஆம் திகதி வரையாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு யாழ். நீதிவான் ஆர். ரி. விக்னராஜா உத்தரவிட்டார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த செல்விகள் ஏரம்ப மூர்த்தி பத்மினி (நீர்வேலி) சண்முகம் சர்மிலா (மட்டுவில்) ம. மேரிசர்மிலா (இக்கம்) ஆகிய யுவதிகளும் நவரட்ணம் சுரேஸ்வரன் (சிவன் பண்ணை வீதி, கோட்டடி) என்ற இளைஞனுமே யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

(ஐ-5-9)

# நிலக்கடலை, கௌபிசெய்கைக்கு 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

தென்மராட்சி, மார்ச் 30

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிலக்கடலை, கௌபி ஆகிய பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க சாவகச்சேரி நகரசபையினர் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் இந்தத் திட்டம் இந்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தினை ஊக்குவிக்க நிலக்கடலை, கௌபி விதைகள் உரவகைகள் தொழில் நுட்ப உதவிகள் பயிற்சி வகுப்புகள் ஆகியவை வழங்கப்படவுள்ளன.

நீர்ப்பாய்ச்சலுடன் கூடிய இந்தப் பயிர்ச் செய்கைக்கென 40விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக நகரசபைச் செயலாளர் மு. செ. சரவணபவ தெரிவித்தார்.

(ஐ-117)

# விவேகானந்தர் உருவப்படம் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

வதிரியில் உள்ளவடமராட்சி மத்திய கல்லூரியில் சுவாமி விவேகானந்தரின் பெரிய அளவிலான உருவப்படம் திரைநீக்க நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

கல்லூரி அதிபர் திருமதி. வி. சுகுமாரன் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைப்பார் தொடர்ந்து பிரார்த்தனை மற்றும் சயம நிகழ்வுகள் நடைபெறும்.

(அ-8)

# சமீபத்திய மழையினால் நெல் அறுவடை பாதிப்பு

தென்மராட்சிப் பகுதியில் சில நாள்களுக்கு முன் பெய்த மழையினால் நெல்அறுவடை பாதிக்கப்பட்டதோடு நெல் பெரும் சேதத்துக்கு உள்ளாகியது.

மறவன்புலோ, தச்சன் தோப்பு, கோவிலாக்கண்டி பகுதிகளில் படையினர் அனுமதி கொடுக்கும் தினங்களை எதிர்பார்த்து அனுமதி கிடைத்ததும் அவசரம் அவசரமாக நெல் கதிர்களை வெட்டிய போதே மழை பெய்தது மேலும் விவசாயிகளால் சூடடிக்கப்பட்ட நெல்லும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளும் தொழிலாளர்களும் மழையில் நனைந்தபடி நெல்லைப் பாதுகாப்பதற்கு கடும் முயற்சி எடுத்ததையும் டிரக்டர்களில் ஏற்றி இறக்கியதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

(இ-133)

# வலிகாமம் பகுதியில் பாதுகாப்புத் தீவிரம்

வலிகாமம் பகுதியில் உள்ள முக்கிய வீதிகளில் இராணுவத்தினர் மீண்டும் வீதித் தடைகளை ஏற்படுத்தி, வீதிச் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மருதனார்மடம் சந்தியில் மருதனார்மடம் – யாழ்ப்பாணம் பிரதான வீதியிலும் உரும்பிராய் – மானிப்பாய் வீதியிலும் இடைநிறுத்தி வைக்கப்பட்ட வீதித்தடைகள் மீண்டும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

வாகனங்களில் வருவோர் வீதித்தடைகளில் இறங்கிப் படையினரின் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டு வருகின்றனர்,

(இ-152)

# சாகும்வரை உண்ணாவிரதம் தொண்டர் ஆசிரியர் அறிவிப்பு

கடந்த வியாழன் முதல் சுழற்சி முறை உண்ணாவிரதம் இருந்துவரும் திருகோணமலைத் தொண்டர் ஆசிரியர்கள் இன்று வியாழக்கிழமை முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளில் மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள் ஈடுபடாமலிருப்பது தமக்குப் பெரும் கவலையளிப்பதாகச் சம்பந்தப்பட்ட 'தொண்டர் ஆசிரியர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7 156)

# தளபாட வசதி

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு தளபாட வசதியைப் பூர்த்திசெய்வதற்காக ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் 6 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களை வழங்கியுள்ளது.

மண்டபக் கதிரைகள் மாணவர்களுக்குரிய கதிரைகள் போன்றவையே இந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-180)

# 34 பேர்களின் வழக்குகள் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 30

சந்தேகத்தின் பேரில் குடாநாட்டில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அனுராதபுரம் நீதிமன்றத்தில் காங்கேசன்துறைப் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டவர்களில் அங்கிருந்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களும் தற்போதும் அனுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களுமாக மொத்தம் 34 பேரின் வழக்குகள் கடந்த திங்களன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவு பொலீஸ் பொறுப்பதிகாரி மேற்படி சந்தேக நபர்களின் வழக்குகளை சட்டமா அதிபரின் அறுவுறுத்தலுக்கமைய யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

பிணையில் விடப்பட்டவர்களை அவர்களது பிரிவு பொலீஸ் நிலையங்க்ளினூடாகவும் அனுராதபுரம் சிறைச்சாலையில் விளக்க மறியலில் உள்ளவர்களுக்கு அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாகவும் மேற்படி சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூன் 26 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு கட்டளை அனுப்புமாறு நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டார்.

பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு :

★ ஆறுமுகம் ஆனந்தராஜா [குடத்தனை வறணி],
★ கிருஷ்ணன் சிவானந்தமூர்த்தி [மட்டுவில், கொடிகாமம்],
★ இராசையா தருமலிங்கம் [அச்சுவேலி],
★ சிவகுரு ஜீவபாலன் [மிசாலை வடக்கு, கொடிகாமம்],
★ சின்னையா விமலரூபன் [மீசாலை வடக்கு, கொடிகாமம்],
★ நடராசா நேசன்[முதலிகோயிலடி, வட்டுக்கோட்டை தெற்கு],
★ அர்ஜீனன் சந்திரன் [கச்சாய் வீதி, கொடிகாமம்],
★ தில்லைநாதன் மகேந்திரராஜா [உடுவில் கிழக்கு, சுன்னாகம்],
★ டொன் பொஸ்கோ ஜோன்டிஸ்ஸஸ்கோ தமிழ்வாணன் [கோயில் வீதி, பண்டத்தரிப்பு],
★ நற்குணம் மனோரஞ்சன் சுபன்(கட்டுடை, மானிப்பாய்),
★ மருதநாயகம் லெஸ்லி ராஜேஜ்கண்ணா (நுணாவிற் சந்தி, சாவகச்சேரி),
★ கதிரன் ஜெகதாஸ்(அந்திரான், தொண்டமானாறு),
★ குமார் வினோத்குமார் (ஆண்டியார் மடம், உடுப்பிட்டி),
★ சோதிப்பிள்ளை பிரதீப் (ஆண்டியார் மடம், உடுப்பிட்டி),
★ சின்னத்தம்பி சின்னத்துரை(கரவெட்டி),
★ சிவபாலன் நாகபூஷணி (சுழிபுரம் மேற்கு),
★ செல்வநாயகம் சத்திய சாயிபாபா(இணுவில் தெற்கு, சுன்னாகம்),
★ இராசரட்ணம் கணேசலிங்கம் (இடைக்குறிச்சி, வரணி),
★ கதிர்காமலிங்கம் ஜயதீதன்(கச்சாய் மேற்கு, சாவகச்சேரி),
★ கணேஸ் அமுதலிங்கம் (3 ஆம் வாய்க்கால், கிளிநொச்சி),
★ துரைசிங்கம் கமலநாத் (சோமசுந்தரம் வீதி, (ஆனைக்கோட்டை),
★ செல்லப்பா ஈஸ்வரன் (புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்),
★ மகேந்திரன் ரவீந்திரன் (சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை),
★ தேவா ரமேஸ்(ஆனைக்கோட்டை),
★ பாலசிங்கம் சசிகரன் (கோண்டாவில்),
★ சுப்பிரமணியம் ரஜனிகாந்த் (கோண்டாவில் வடக்கு),
★ நடேசபிள்ளை சிறீரஞ்சன் (கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு),
★ கோவிந்தன் செல்வகுமார் (யோகபுரம், மல்லாவி),
★ சின்னத்தம்பி சுகிர்தன் (புத்தூர்மேற்கு, அச்சுவேலி),
★ சிவஞானம் சுபாஸ்கரன்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரம்: -

★ தெய்வேந்திரன் ரஞ்சிதவாணி (யாழ். வண்ணார் பண்ணை),
★ அருள்தாஸன் கிருஸ்தோப்பர் கஜன் (யாழ். குருநகர்). (இ-9)

## கைதான குருக்கள் விடுதலை

கொழும்பு, மார்ச் 30

கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்ட அவிசாவளை இங்கிரிய ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயக் குருக்களான சிவஸ்ரீ இராமமூர்த்திக்குருக்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டார்.

பாதுக்கை பஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர் அவிசாவளை குருவிற்ற பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவர்மீது குற்றம் எதுவும் சுமத்தப்படாத நிலையில் இவர் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இவரது விடுதலை தொடர்பாகச் சர்வதேச இந்துமதக் குருபீடத் தலைவர் சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி கலாநிதி ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் உட்படப் பலர் அரசுக்கு நெருக்குதல் கொடுத்து வந்தனர். (இ-3)

## யுத்தத்தை நிறுத்துமாறு ஈ. பி. டி. பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்த வேளையில் குடாநாட்டில் ஆரம்பமாகியுள்ள தேவையற்ற யுத்தத்தை நிறுத்த இருசாராரும் முன்வரவேண்டும் என்று ஈ. பி. டி.பி அமைப்பின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளரும், ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவருமான ந. மதனராஜா கேட்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இதைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நடந்து கொண்டு இருக்கும் போரினால் அழிவுகளையே காணக்கூடியதாக இருக்கின்றது. 33 பேருக்கு மேல் காயம் அடைந்தும் பாலகன் உட்பட 2பேருக்கு மேல் இறந்தும் இருக்கின்ற இந்த யுத்தத்தை மனிதாபிமானமுள்ள எந்த மனிதனும் சகித்துக் கொள்ளமாட்டான்.

இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இடம்பெயர்ந்து மக்கள் மீளக் குடியமர்ந்து தமது சகஜ வாழ்க்கையை மீண்டும் நிலைப்படுத்திக்கொண்டு இருக்கும் இவ்வேளையில் — சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்த வேளையில் — மூன்றாந்தர மத்தியஸ்தம் கிடைத்தவேளையில் — இப்போர் வேண்டாத போராகக் கணிக்கப்படுகின்றது.

இப்போரை நடத்தும் இருசாராரும் மக்களின் சுபீட்சத்தை நினைப்போரா இருந்தால் போரை நிறுத்தி பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றுள்ளது. (இ-3)

## சுண்ணாம்பு சூளையால் சூழல் பாதிப்பு

வலி.தென்மேற்கு, மார்ச் 30

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சுண்ணாம்புச்சூளைகளினால் சூழல் மாசடைவதாக வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ. அ. ஜோன்சனிடமும் நவாலி சுகாதாரப் பரிசோதகர் வி. தயாமோகனிடமும் முறையிடப்பட்டுள்ளது.

சுதுமலை, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய் பகுதிகளிலேயே சுண்ணாம்புச் சூளைகளினால் அதிகளவிலான புகை வெளியேறுகின்றது. (இ-185)

## வவுனியாவில் ஒரே நாளில் மூவர் கைது

வவுனியா, மார்ச் 30

வவுனியா நகரப பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் 3 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

வடிவேல் சந்திரன் (வயது 30), சொர்ணலிங்கம் ஸ்ரீ ஆனந்தராஜா (வயது 29), சிவசுப்பிரமணியம் விஜயரூபன் (வயது 25) ஆகியோரே கைதானவர்கள் ஆவர். (இ-7-164)

## பெயர்விவரம் அனுப்புமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30

தமிழ்மொழி மூல அரசினர் பாடசாலைகளில் சங்கீதம், நடனம் மற்றும் சித்திரம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்வவதற்காக விண்ணப்பம் கோரப்பட்டபோது, விண்ணப்பித்து இதுவரை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள் தமது பெயர் விவரங்களை மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. [இ-7-10]

## டிப்ளோமா கற்கை நெறி

யாழ்ப்பாணம், மார்ச் 30

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் டிப்ளோமா தொழில் நுட்பவியல் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார்.

நாளைவெள்ளிக்கிழமைக்கு முன்னர் பதிவுகளுக்குரிய பணத்தை ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் செலுத்துமாறும் அவர் கோரியுள்ளார். இந்தக் கற்கை நெறிக்கு 129 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-185)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கணித மாமேதை

**அமரர் பொன், வேலாயுதம் (VECTOR)**

( B. Sc. )

மலர்வு 30—05—1942 உதிர்வு 29—02—2000

சொல்லாலும் செயலாலும் தூய்மையுடன் செயலாற்றி
எல்லோர்க்கும் வழிகாட்டி இனிய பல பணி செய்து
கல்வி வளர்ச்சிக்காய் கண் துஞ்சா துழைத்தவரே!
எல்லோரும் கதறியழ எங்கே ஐயா சென்றிட்டீர்!


அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமியைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அமரரின் குடும்பத்தினர்.

வேலாயுத பவனம்,
உடுப்பிட்டி. (74931)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் முருகேசு நடராஜலிங்கம்**

(பருத்தித்துறை நகராட்சி மன்ற முன்னாள் ஊழியர், மாலுசந்தி ஒய்வுபெற்ற மின்சார சபை ஊழியர், மஹாலக்ஷ்மி திரை அரங்கம், இந்திர தீபம், இந்திர கீத விளம்பர சேவை, சாந்தி மில், இந்திரன் வெல்டிங் வேக்ஸ் ஆகிய ஸ்தாபனங்களின் உரிமையாளர்)

தோற்றம் 19-12-1944 மறைவு 01-03-2000

முப்பத்தொரு நாள்கள் சென்றால் என்ன?
முப்பத்தொரு ஆண்டுகள் கடந்தால் என்ன?
எம் உயிர் இருக்கும் வரை பப்பா உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களைவிட்டு அகலாது! இனி பப்பா
என்றழைக்க எப்பிறப்பில் காண்போமோ நாம்?

நாளை(31—03—2000) வெள்ளிக்கிழமை காலை நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். அந்தியேட்டிக் கிரியைகள் யாவும் பருத்தித்துறை தெணிப்பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறும்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

''சாந்திமில்''
முதலாம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை. (74927)

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக வட்டு. வடக்கு J/158 பிரிவில் கிராம உத்தியோகத்தராக் கடமையாற்றும்

**திரு. வே.த.கதிர்காமநாதன்**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி த.சுகிர்தரத்தினம்**

அவர்கள் 27-03-2000 அன்று காலமானதையிட்டு அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலரும்,*
*நலன்புரிச் சங்கத் தலைவரும்,*
*உறுப்பினர்களும்.*

*பிரதேச செயலகம்,*
*சங்கானை.*

(74949)

# அதிபர் பதவிக்கு வெற்றிடம்

புன்னாலைக்கட்டுவன்,மார்ச்30

தென்மராட்சிக் கல்வி வலயத்தை சேர்ந்த நான்கு பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம், அல்லாரை அ.த.க. பாடசாலை, கொடிகாமம் அ.த.க. பாடசாலை, சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயம் ஆகியவையே இந்த நான்கு பாடசாலைகளும் ஆகும்.

# காங்கேசனில் 3 பேர் மட்டுமே தடுத்துவைப்பு

காங்கேசன்துறைக் கைதிகள் தடுப்பு முகாமில் தற்பொழுது 3 ஆண் கைதிகள் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நேற்று அங்கு சென்று கைதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இதனைத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட மூவரில் ஒருவரான துரைசிங்கம் பிறேம்குமார் என்பவர் சுகவீனம் காரணமாகப் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-10)

# பிரதேச செயலர் அலுவலகம் இடம் மாற்றம்

பளைப் பிரதேச செயலர் அலுவலகம் இன்று முதல் தற்காலிகமாகச் சாவகச்சேரி பிரதேச சபையில் இயங்கவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் பளைப் பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி நேற்று மேற்கொண்டிருந்தார்.

பளையிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன. (உ-5)


**பிள்ளையார் தொலைத்தொடர்பு நிலையம்**

பிரதான வீதி, நெல்லியடி.

எமது நிறுவனமும் எமது இணை நிறுவனங்களும் உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைத்தொடர்பு சேவைகளை எமது வழமையான கட்டணத்துடன் சேவையாற்றிக்கொண்டு இருக்கின்றன என்பதனை அறியத்தருகின்றோம்.

(C/11583) – *உரிமையாளர்*



**வேண்டுகோள்**

பாவித்த NATIONAL PANASONIC - 2 ஸ்பீக்கர் கசெற் ரேடியோ வாங்கும்போது அது களவாடப்படாதது என்பதை உறுதி செய்ய என்னுடன் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

வே.பாலசுந்தரம்
"சிவா"
கோண்டாவில்.

(74925)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 16 - 05 - 1917

இறப்பு 29 - 02 - 2000

திருமதி

**கனகசபை செல்லம்மா.**

அம்புலி காட்டி அமுதூட்டி, எமையெல்லாம்
வாழ்வாங்கு வாழ வைத்த அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்தாலும் எம் நெஞ்சில்
உங்கள் நினைவுகள் நீங்காதம்மா.

மக்கள், பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*687/15, மானிப்பாய் வீதி,*
*ஒட்டுமடம்.*

(C/11562)

# திரைப்படக் காட்சித் தொடர்

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்படவட்டமும் இணைந்து வழங்கும் - கலாநிதி லெஸ்ரர் ஜேம்பீரிசின் கலைத்துவத் திரைப்படக் காட்சித் தொடர் நாளைமறுதினம் மாலை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மொழியியற்றுறை விரிவுரையாளர் திரு. விமல் சுவாமிநாதனின் விளக்கவுரையைத் தொடர்ந்து கலாநிதி லெஸ்ரர் ஜேம்பீரிசின் "கம்பரெலியா" (Gamparaliya) எனும் திரைப்படம் வீடியோக் காட்சியாக இடம்பெறவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் இந்நிகழ்வில் வருகைதந்து பயன்பெறமுடியும் என்று, புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் முன்னாள் மாணவரும் உதவி விரிவுரையாளருமான

**திரு. ந. இராஜவிசாகன்**

அவர்களின் பாசமிகு தந்தையார்

**வேலுப்பிள்ளை நடராசா**

அவர்கள் இறைபதமடைந்ததை கேள்வியுற்று ஆழ்ந்த வேதனையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*விவசாயபீட ஆசிரிய சமூகம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

(74937)

# இறுதியாட்டம்

சார்ஜா,மார்ச்30

மூன்று நாடுகளுக்கிடையில் சார்ஜாவில் நடைபெறும் ஒருநாள் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை தென்னாபிரிக்க - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெறும். இந்தியா இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் பங்குபற்றும் தகுதியை இழந்துவிட்டது. (உ-8)

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பையா சுகிர்தரத்தினம்

கலைநகர் சித்தன்கேணியை வசிப்பிடமாகக் கொண்டவரும், 69/1, அலஸ்றோட், நீர்கொழும்பைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி தம்பையா சுகிர்தரத்தினம் 27-03-2000 திங்களன்று நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - சிரோன்மணி தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், இளைப்பாறிய அதிபர் வேலுப்பிள்ளை தம்பையா அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சி.தேவகதேவியின் சகோதரியும் கதிர்காம நாதன் (கிராம உத்தியோகத்தர், வட்டு. வடக்கு), நக்கீரன் (ஆஸ்திரேலியா), குந்தவி (ஆஸ்திரேலியா), கலைச்செல்வி (பிரான்ஸ்), காண்டீபன் (லண்டன்), சிவசக்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்பரசி (ஆசிரியை, பிரட்மன் மகாவித்தியாலயம், தாண்டிக்குளம், வவுனியா), ஆனந்தரூபி (ஆஸ்தி ரேலியா), தேவராசா (ஆஸ்திரேலியா), வரதராசா (பிரான்ஸ்), சசி ஆகி யோரின் பாசமிகு மாமியாரும், மோகனகீர்த்தனா, ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்களான கவிவர்ணன், கவிபாரதி, கவிநிலா, பிரான்ஸில் வசிப்ப வர்களான கீர்த்திகா, ரூபிகா, நிவேதிகா, எழிலி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நீர்கொழும்பில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வி.ரி.கதிர்காமநாதன்**
(மகன்)

*கலையகம், கலைநகர்,*
*சித்தன்கேணி.*

(C/11579)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

குருவாய் வருவாய் பிறவிகள் தோறும்



மலர்வு 30-05-1942

உதிர்வு 29-02-2000

அமரர் **வெக்டர் வேலாயுதம்** (B.Sc.)

காவியில் காவியம் படைத்த
கணிதப் புயலே – மண்ணும்
விண்ணும் மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் அழியாது.

*M.ஜெயந்திரபாலா*
*யாழ். விஞ்ஞானபீடம்*
*2ஆம் வருட மாணவன்*

(74946)


**லிபேட்டி**

அச்சுவேலி

இன்று

நாகேந்திரராவ்,
சவுத்திரி,
சாந்தி
நடிப்பில்

**காதலே சாட்சி**

(புதிய வெளியீடு)

காட்சிகள் 10.30, 2.30

T.P : 070-212223
070-212678


*Fax No:- 0094 - 70212223*

(74706)


# 45ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் தம்பிஐயா சண்முகநாதன்

(மின்மானி வாசிப்பாளர், இலங்கை மின்சார சபை)



தோற்றம் 01 - 09 - 1943

மறைவு 15 - 02 - 2000

பொருவில் கந்தன் கதிர்காமம் கண்டாய்
உயிரில் உந்தன் உயர் காதல் கொண்டான்
கருவில் சேர்ந்தன் அமர் அம்மன் கோயில்
அருளில் அடியான் நீயும் ஐக்கியமானாய்
இருளில் லாமல் மாற்றர் வாழ C.E.Bயில்
பொருளில் லார்க்கு முயர் சேவை செய்தாய்
மருவில் பூவோடு "நடுவை" நாடித் தேட
அருளில் அயர்வில் அமலன் அடிநீ

சேர்ந்தாய்
உருவில் உணர்வில் உதிப்பாய் எம்மில்
என்றும்.

*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

(74951) – *நண்பர்கள்*


**ராஜா**

யாழ்ப்பாணம்

3ஆவது வாரமாக

ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன், சிவாஜி மற்றும் பலர் நடித்த

**படையப்பா**

காட்சிகள்
10.30, 2.30 (C/11349)



**நாகம்ஸ்**

சுன்னாகம்

ரம்யாகிருஷ்ணன், சௌந்தர்யா
நடித்த

**அம்மன்**

(ரீஸ்ஸ்)

காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)

மனிதர்களை பேய்களுக்காக கொலை செய்யும் சம்பவங்கள் நிறைந்தது.

(74813)

# செஞ்.குழு அம்பன் விஜயம்

நெல்லியடி, மார்ச்30

செங்சிலுவைச் சர்வதேசக் குழு வின் பிரதிநிதி செல்வி சோவி, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணசலிங்கம் ஆகியோர் நேற்று வடமராட்சி கிழக்கு அம்ப னுக்கு விஜயம் செய்து நிலைமை களை நேரில் ஆராய்ந்தனர்.

தற்போதைய யுத்தநிலைமை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கும் அவர்கள் சென்று அங்குள்ளவர்க ளுடன் கலந்துரையாடினர்.

அதேசமயம் - இந்தக் குழுவி னர் சமரில் இடையில் சிக்கி காயம டைந்து மந்திகை மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வருவோரை யும் நேரில் சந்தித்து உரையாடினர்.

வல்லிபுரக் கோயில் இராணுவத் தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட் டிருக்கும் - இடம்பெயர்ந்த - மக் களை வடமராட்சிப் பகுதிக்குள் செல்வதற்கு அனுமதிக்குமாறு அவர்கள் பருத்தித்துறை 524 ஆவது பிரிகேட்டின் படை அதிகாரிகளிடம் கோரியதாகவும் -

நேற்று மாலைக்குள் மக்களை அங்கிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அப்பகுதி பிரிகேடியர் உறுதியளித்ததாகவும் -

பேராசிரியர் வி.கே.கணேசலிங் கம் தெரிவித்தார்.

இதேவேளை -

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீ ரங்கேஸ்வரனும் சபை யின் உப தலைவரும் நேற்றுக் காலை மந்திகை மருத்துவமனைக்கு விஜயம்செய்து காயமடைந்தவர்க ளுக்கு பால்மா வகைகளை அன்ப ளிப்புச் செய்தனர்.

(உ-6-109)

# உபதபால் நிலையம், வீடுகள் செம்பியன்பற்றில் சேதம்

வடமராட்சி, மார்ச்30

செம்பியன்பற்று, வடக்குப் பகுதி யில் கிபிர் குண்டுவீச்சுத் தாக்குத லில் ஆறு வீடுகள் மற்றும் உப தபால் நிலையம் என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் முற்பகல் 9 மணியளவில் கிபிர் விமானம் அடுத் தடுத்து மூன்று குண்டுகளை இப் பகுதியில் வீசியுள்ளது.

இத்தாக்குதலில் அருகருகே இருந்த மூன்று வீடுகளும் மற்றும் ஏனைய மூன்று வீடுகளும் செம்பி யன்பற்று உபதபால் நிலையமும் முற்றாகச் சேதமடைந்தன.

(உ-173-15)

# 3 மாதத்துக்குரிய கையிருப்பு பளை ப.நோ.கூ.சங்கத்தில்!

## இருப்பதாகத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச்30

பளைப் பிரதேசசெயலர் பிரிவு மக்களுக்கு மூன்று மாதங்களுக்கு வழங்கக் கூடிய உணவுப் பொருள் கள் பளை ப.நோ.கூ.சங்க உணவுக் களஞ்சியத்தில் உள்ளன.

அவற்றை மீட்க முடியாத நிலைமை உள்ளதாக பளை ப.நோ. கூ.சங்கத் தலைவர் சி.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

"பளைப் பிரதேசத்தில் இடம் பெற்ற தாக்குதல்களினால் ப.நோ.கூ.சங்க கட்டடத்திற்கோ அல்லது சங்கத்தின் எரிபொருள் நிலையத்திற்கோ இதுவரை சேதம் எதுவும் ஏற்படவில்லை.

எரிபொருள் நிலையத்தில் மட் டும் 2 ஆயிரம் லீற்றர் பெற்றோலும், 4 ஆயிரம் லீற்றர் டீசலும், 6 ஆயி ரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெயும் சேமிப்பில் உள்ளன. இத்தாவிலில் உள்ள ப.நோ.கூ.சங்கக் கிளை உடைக்கப்பட்டு அங்கிருந்த் பொருள்கள்யாவும் திருடப்பட்டுவிட் டதாகப் பளையிலிருந்து தகவல் கள் கிடைத்துள்ளன" - இப்படி அவர் கூறினார்.

(உ-5-15)

## பிரதேச செயலர் அலுவலகம் இடம் மாற்றம்

பளைப் பிரதேச செயலர் அலு வலகம் இன்று முதல் தற்காலிக மாகச் சாவகச்சேரி பிரதேசசபையில் இயங்கவுள்ளது.இதற்கான சகல ஏற் பாடுகளையும் பளைப் பிரதேச செய லர் எஸ்.புத்திசிகாமணி நேற்று மேற் கொண்டிருந்தார். பளையிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் இந்த அலுவலகத் தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

(உ-5)

---

### சீருடை அணிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்த எஸ். மார்க்கண்டு என்பவர் தமக்குக் கிடைத்த அனுபவம் குறித்து கூறியதாவது:-

திங்கள் இரவு இடம்பெற்ற தாக்குதல்களைத் தொடர்ந்து இத் தாவிலுக்குப் பின்பக்கமாக உள்ள தோட்டமொன்றிற்கு நாங்கள் சுமார் 22 குடும்பங்களைச் சேர்ந்தோர் சென்று அங்கு தங்கியிருந்தோம்.

அங்கேயும் ஷெல் மழைபோலப் பொழியத் தொடங்கியதையடுத்து அங்கிருந்து வெளியேறி காட்டுப் பாதையூடாக எழுதுமட்டுவாளுக்கு வந்து சேர்ந்தோம்" - என்றார்.

(உ-5)

---

### பச்சிலைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதைவேளை முகமாலை, இத் தாவில், இந்திராபுரம், கிளாலி, எழுதுமட்டுவாள் போன்ற இடங்களி லிருந்து இடம்பெயர்ந்த மக்களை, அவர்கள் தஞ்சமடைந்துள்ள இடங் களுக்கு நேரில் சென்று பிரதேச செயலர் பார்வையிட்டார்.

(உ-5)

---

### ஷெல் தாக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோபாலு என்பவரே உயிரிழந்தார். அவரது இரு பிள்ளைகளும் பளை உதவி அரசாங்க அதிபர் அலுவல கத்தில் கடமையாற்றும் ரேவதி என்ற பெண்ணும் காயமடைந்தனர். அவர் கள் பளை ஆஸ்பத்திரியில் சிகிச் சைக்காக அனுமதிக்கபட்டுள்ளதா கக் கூறப்பட்டது.

அதே சமயம் -

கடந்த திங்களன்று புலோப் பளைப்பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் திருமண வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த மாப்பிள்ளை உட்பட நால்வர் காயமடைந்தனர்.

- மாப்பிள்ளையான செல்லையா நந்தகுமார்(வயது36), அவரது சிறிய தாயாரான கணேஷ் பரமேஸ்வரி ஆகியோரும் அவர்களுடன் சென்ற சிறுமி ஒருத்தியும் கார்ச்சாரதியுமே காயமடைந்தவர்களாவர் இவர்கள் நால்வரும் பளை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் இவர்களில் பரமேஸ்வரி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்தி ரிக்கு மாற்றப்பட்டார்.

(உ-6-9-15-109-173)

---

### மருதங்கேணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதலில் தமது தரப் பில் 25 பேர்வரை பலியானதாகவும் -

அரசுதரப்பில் நூறுக்கும் அதிக படையினர் உயிரிழந்ததாகவும், நூறுக்கும் அதிக படையினர் காயம டைந்ததாகவும் -

புலிகளின் அறிவிப்பு மேலும் தெரிவித்தது.

களநிலைமையைக் கருத்திற் கொண்டு நேற்று முற்பகல் 10.15 மணிக்கு "மருதங்கேணியிலிருந்து படையினர் தந்திரோபாய பின்வாங் கலை மேற்கொண்டதாகப் படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

செம்பியன்பற்று, வத்திராயன், ஆழியவளை, தட்டுவன்கொட்டி ஆகிய பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட புலிகளின் நிலைகள் மீது கிபிர் விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதாகவும் படைத்தரப்பு அறிவிப்புத் தெரிவித் தது.

செவ்வாய் பிற்பகல் 1.00 மணி முதல் நேற்று மதியம்வரை நடந்த சண்டையில் இரு அதிகாரிகள் மற் றும் 11 சிப்பாய்கள் கொல்லப்பட்ட தாகவும், ஒன்பது அதிகாரிகளும் 54 சிப்பாய்களும் படுகாயமடைந்த தாகவும், 83 சிப்பாய்கள் சிறிய காயங்களுக்கு உள்ளானதாகவும் படைத்தரப்பு அறிவிப்பு மேலும் தெரி வித்தது.

இதற்கிடையில் -

நாகர்கோவில் பகுதியில் உள்ள படைநிலைகள் மீதும் நேற்றிரவு புலி களின் தாக்குதல்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக ஒரு செய்தி தெரிவித் தது.

(உ-7)

## வெளிவாரி பரீட்சை முடிவு வெளியானது

பேராதனை,மார்ச்30

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினால் நடத்தப்பட்ட பொதுக் கலைமாணிப் பரீட்சை (பீ.ஏ) முடிவுகள் கடந்த திங்களன்று வெளியாகின.

இதேவேளை -

கடந்த வருட இறுதியில் நடத் தப்பட்ட முதற்கலைத் தேர்வு (ஜீ.ஏ. கியூ) பரீட்சை முடிவுகள் இந்த வார இறுதியில் வெளியிடப்படும் எனவும்-

எதிர்காலத்தில் இந்தப் பரீட்சை முடிவுகளை பரீட்சை முடிந்து ஒரு சில மாதங்களுக்குள்ளேயே வெளி யிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் -

பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-7)

## தொடர்ந்து நேற்றும் பேச்சு

கொழும்பு,மார்ச்30

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பொ.ஐ.முன்னணிக்கும்- ஐ.தே.கட்சிக்கும் இடையிலான மூன் றாம்கட்டப் பேச்சுக்கள் நேற்று ஜனா திபதி தலைமையில் அலரி மாளி கையில் நடைபெற்றன.

அதிகாரப்பரவலாக்கல் குறித்து நேற்றைய பேச்சுக்களில் முக்கி யமாக அலசப்பட்டது.

(உ-6)

## உடற்பயிற்சிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச்30

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடை யிலான வலயமட்ட உடற் பயிற்சிப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத் தில் நடைபெறவுள்ளது.

தீவகக் கல்வி வலய கல்வி அபிவிருத்திக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லஸ் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ் வில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளருமான என்.மதன ராஜா பிரதமவிருந்தினராகவும், வண.பிதா யூட்நிக்சன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(உ-7)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்30

ஏழாலை கோட்டைக்காடு அரசி னர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக் குப் பாடசாலை மைதானத்தில் அதி பர் திருச்சி நவரத்தினம் தலைமை யில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் உடுவில் கல் விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் பிர தம விருந்தினராகவும், உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வி. பாலசிங்கம் சிறப்பு விருந்தினராகவும், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கப் பொது முகா மையாளர் கே.வி.குணரத்தினம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(உ-8)

---

### தென்மராட்சியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

56பேரும், தவிசிக்குளம் காணிக்கை மாதா கோயிலில் 38 குடும்பங்க ளைச் சேர்ந்த 148 பேரும், போக் கட்டி றோ.க.த.க பாடசாலையில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும் ஒட்டுவெளி நாச்சிமார் கோயிலில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 192 பேரும் தங்கி உள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இந்த நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ள மக்களுக்கு சாவகச் சேரி பிரதேச செயலகம் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றது.

(உ-5-6-31)


கலைப் பட்டதாரியாக

உயர்தரம்
3 பாடங்களில்
சித்தியடைந்துவிட்டீர்களா?
வீட்டிலிருந்து படித்தே
பட்டதாரியாகலாம்

விவரங்களுக்கும்
பாடத்திட்டத்திற்கும
20 ரூபா முத்திரைகளுடன்
தொடர்புகொள்க.

த. பெ. இல. 100,
யாழ்ப்பாணம்.

(74934)


# மட்டு. தொண்டர் ஆசிரியரும் உண்ணாவிரதப் போராட்டம்

மட்டக்களப்பு,மார்ச்30

நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டுமெனக் கோரி மட்டக்களப்பு மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களும் நேற்று முதல் சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தில் குதித்தனர் என மட்டக்களப்புச் செய்திகள் தெரி வித்தன.

நேற்றுக்காலை 8.00 மணிக்கு மாவட்டக் கல்வித் திணைக்களத் துக்கு முன்னால் ஆரம்பமான இந் தப் போராட்டத்தில் சுமார் இருநூறு தொண்டர் ஆசிரியர்கள் பங்கு கொண்டனர்.

திருகோணமலைத் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டுமெனக் கோரி மாகாணக் கல்வி அமைச்சின் முன் பாக கடந்த ஒருவார காலமாக சுழற்சி முறையிலான உண்ணாவிர தத்தில் ஈடுபட்டு வருகின்றமை தெரிந்ததே.

(உ-7-21-க)

# பண்டத்தரிப்பில் நேற்று சிப்பாய் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மார்ச்30

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்ப வத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இலங்கை இராணுவத்தின் தேசிய காவலர் படைப்பிரிவைச் சேர்ந்த அனுர நிஷாந்த என்ற சிப் பாயே உயிரிழந்ததாகத் தெரி விக்கப்படுகிறது.

இவருக்கும் மற்றொரு இராணு வச் சிப்பாய்க்கும் இடையில் இருந்த தனிப்பட்ட குரோதம் காரணமாக இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன் னாகம் பொலீஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

(உ-6)

# 'லங்காராணி' கப்பலின் வெள்ளோட்டம் ரத்து!

திருகோணமலை,மார்ச்30

திருகோணமலைக்கும் - காங்கே சன்துறைக்கும் இடையிலான பய ணிகள் கப்பல் சேவைக்கெனப் புதி தாகக் கொள்வனவு செய்யப்பட்ட 'லங்காராணி' கப்பல் இன்று கொழும்பில் வெள்ளோட்டம் விடப் பட இருந்தது.

ஆனால் நேற்று மாலை திடீ ரென வெள்ளோட்டம் ரத்துச் செய் யப்படுவதாக அறிவிக்கப்பட்டது என்று திருகோணமலைச் செய்தி கள் தெரிவித்தன.

வெள்ளோட்டம் ரத்துச் செய்யப் பட்டமைக்கான காரணம் என்ன வெனத் தெரிவிக்கப்படவில்லை.

இந்த வெள்ளோட்ட நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வடக்கு - கிழக்கு அரசாங்க அதிபர்களுக் கும், பிரதேச செயலர்களுக்கும் முன்னர் அழைப்பு விடுக்கப்பட்டிருந் தது.

(உ-7)

## திருவடிநிலை, சவுக்கடி

# கடலுக்குச் சென்ற மீனவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

வலி.மேற்கு,மார்ச்30

திருவடிநிலை, புளியந்தீவு, சவுக் கடி ஆகிய பகுதிகளில் இருந்து மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்ற இருநூறுக்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் கடற் படையினரால் திருப்பி அனுப்பப்பட் டுள்ளனர்.

இதனால் அவர்கள் அரைகுறை யாக தொழிலைக் கைவிட்டு கரைக் குத் திரும்பினர்.

இதேவேளை-

சுழிபுரம் பகுதியில் படையினரின் சோதனைகள் நேற்று அதிகரித்துக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட் டது. மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளிலும் சோதனைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

(ஐ-3-175)

# இலவச சீருடைத் துணி வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ். மாவட்ட பாடசாலை மாண வர்களுக்கு இந்த ஆண்டுக்கான இலவச பாடசாலைச் சீருடைகள் வழங்கும் நடவடிக்கை நாளை காலை 9.30 மணிக்கு யாழ். வேம் படி மகளிர் கல்லூரியில் யாழ். மேல திக மாகாணக் கல்விப் பணிப்பா ளர் கலாநிதி ச.நா.தணிகாசலம் பிள்ளையினால் வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்படும்.

இந்நிகழ்வில் ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் சமு கம் தருமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(உ-9)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தப்பு சின்னத்தங்கம்

அத்தாய், அல்வாய் கந்தையா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற கந்தப்புவின் மனைவியுமாகிய சின்னத்தங்கம் 29-03-2000 நேற்று மாலை 6.00 மணியளவில் இயற்கை எய்தினார்.

அன்னார் சடாரணமூர்த்தி, ஞானவடிவேலு, மகேஸ்வரி, கற்றன் புவனேஸ்வரி, பாலசரஸ்வதி, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மலிங்கம் (இளைப்பாறிய அதிபர், எதன்சைற் த.வி.) இலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரது மைத்துனியும், பத்மாவதி, கணேசராசா (கொட்டக்கல), லோகநாதன் (அதிபர், எதன்சைற் தமிழ் வித்தியாலயம்), ரவீந்திரன் (U.K.), சிறீதரன் (U.K.), கமலவதனா ஆகியோரது பெரியதாயாரும், காலஞ்சென்ற வேலாயுதம், பரம நாதன் (சிங்கப்பூர்), வரதராசா, புஸ்பலதா, தவம் (U.K.), சிவம் (U.K.), நிந்தன் (U.K.), சிறி (U.K.), றமேஸ் (U.K.), சாந்தி (ஆசிரியை, கொட்டக்கல தமிழ் மகாவித்தியாலயம்) ஆகியோரது மாமியாரும், அருண், சாதனா, ஹரி, ஹம்சி, உமா,றுக்கி, கண்ணன், பாபு, றேகா, கீதா, ஜெயா, சதுசி ஆகியோரது அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

இன்று (30-03-2000) வியாழக்கிழமை தகனக் கிரியைகள் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திரு. திருமதி பரமநாதன்

அத்தாய்,
அல்வாய்.

(C/11586)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.